

முதலீட்டாளர் கண்ணோட்டத்தில்

# பத்திர சந்தையைப்

புரிந்து கொள்வதற்கான சிற்றேடு

भारतीय प्रतिभूति और विनिमय बोर्ड

Securities and Exchange Board of India

BSE NSE IPFT NSDL CDSL MSE

**பொறுப்புத் துறப்பு:**

பிழைகள் மற்றும் அச்சு தவறுகளை தவிர்ப்பதற்கு இந்த பதிப்பில் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றாலும், இதில் இடம் பெற்றுள்ள தகவல்களை எந்த விதத்திலாவது பயன்படுத்துவதன் காரணமாக எவருக்கேனும் எந்த வகையிலாவது சேதமோ அல்லது இழப்போ ஏற்பட்டால் அதற்கு பதிப்பாளர் எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டார்.

பதிப்பை இணைந்து வெளியீடுபவர்கள்:

- செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்ச்சேஞ் போர்டு ஆ.்.ப் இந்தியா
- BSE லிமிடெட்.
- நேஷனல் செக்யூரிட்டிஸ் டெப்பாசிட்டரி லிமிடெட்
- நேஷனல் ஸ்டாக் எக்ஸ்ச்சேஞ் ஆ.்.ப் இந்தியா லிமிடெட்.இ
- சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்
- மெட்ரோபாலிட்டன் ஸ்டாக் எக்ஸ்ச்சேஞ் ஆ.்.ப் இந்தியா லிமிடெட்

தேதி: அக்டோபர், 2019

**வாசகருக்கான குறிப்பு:**

முதலீட்டு சந்தை குறித்த சுருக்கமான அடிப்படை தகவல்களை வழங்குவதே இந்த சிற்றேட்டின் குறிக்கோள். உங்களுக்கு மேலும் விவரங்கள் தேவைப்பட்டால் SEBI, BSE, NSE, NSDL மற்றும் CDSL இணையதளங்களுக்கு சென்று அங்குள்ள ஆன்லைன் தகவல்களை பார்வையிடவும்.

# பொருளடக்கம்


| *வரிசை எண்* | *பொருளடக்க அட்டவணை* | *பக்க எண்.* |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | பத்திரங்கள் சந்தைக்கான முறைபடுத்தும் கட்டமைப்பு | 1 |
| 3. | பத்திரங்கள் சந்தை என்றால் என்ன? | 2 |
| 4. | முதன்மை சந்தை மற்றும் இரண்டாம் நிலை சந்தை | 4 |
| 5. | பத்திரங்கள் சந்தையில், சந்தை உள்கட்டமைப்பு நிறுவனங்கள் மற்றும் சந்தை இடைத்தரகர்கள் யார்? | 6 |
| 6. | முதலீடு செய்வதன் அடிப்படைகள் | 7 |
| 7. | பத்திரங்கள் சந்தையில் முதலீடு செய்வதில் உள்ள முக்கிய ஆபத்துகள் | 8 |
| 8. | பத்திரங்கள் சந்தையில் முதலீடு செய்வதற்கான முன் தேவைப்பாடுகள் | 9 |
| 9. | டிமேட் கணக்கின் அடிப்படை சேவைகள் (BSDA) | 11 |
| 10. | கணக்கை தொடங்குவதற்கான செயல்முறை: உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்வதற்கான (KYC) செயல்முறை | 11 |
| 11. | அதிகாரப் பத்திரம் | 12 |
| 12. | நியமனம் செய்தல் | 13 |
| 13. | பத்திரங்கள் சந்தையில் நான் முதலீடு செய்வது எப்படி? | 13 |
| 14. | முதன்மை சந்தை மூலமாக முதலீடு செய்தல் | 13 |
| 15. | முதன்மை சந்தையில் முதலீடு செய்வதற்கான செயல்முறை | 14 |
| 16. | வங்கி கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகையை நிறுத்திவைக்கும் ஒப்புதலை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் (ASBA) | 15 |
| 17. | இரண்டாம்நிலை சந்தை மூலமாக முதலீடு செய்தல் | 15 |
| 18. | வர்த்தக நாட்கள் மற்றும் வர்த்தக & தீர்வு சுழற்சி | 16 |
| 19. | ஒப்பந்தக் குறிப்பு | 17 |
| 20. | தொடர் கணக்கு அதிகாரமளிப்பு | 18 |

| வரிசை எண் | பொருளடக்க அட்டவணை | பக்க எண். |
|---|---|---|
| 21. | வர்த்தக சரிபார்ப்பு | 19 |
| 22. | மார்ஜின் என்றால் என்ன? | 19 |
| 23. | பங்குத் தரகர் மற்றும் வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடமிருந்து கணக்கு விவர அறிக்கை | 19 |
| 24. | தொகுக்கப்பட்ட கணக்கு அறிக்கை (CAS) | 20 |
| 25. | கிளைதிட்டங்கள் சந்தை | 20 |
| 26. | மியூசுவல் ஃபண்ட்ஸ் | 21 |
| 27. | பரிமாற்ற வர்த்தக நிதிகள் (ETF) | 23 |
| 28. | பத்திரங்கள் சந்தையின் SEBI ஸ்கோர்களில் (SCORE) குரையுற்றோர் குறை தீர்த்தல், மத்தியஸ்தம் செய்யும் இயக்க முறை மற்றும் தவணை தவறியவர்கள் உரிமை கோருதல் | 24 |
| 29. | பங்கு சந்தையின் முதலீட்டாளர் சேவைகள் பிரிவு | 24 |
| 30. | மத்தியஸ்தம் செய்யும்முறை | 25 |
| 31. | உரிமைக் கோரப்படாத அல்லது செலுத்தப்படாத தொகையைப் பற்றிய தகவல் - IEPF | 25 |
| 32. | பிற்சேர்க்கை – I: பத்திரங்கள் சந்தையில் முதலீடு செய்வதற்கு அல்லது வர்த்தகம் செய்வதற்கு செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை | 26 |
| 33. | பிற்சேர்க்கை – II: முதலீட்டாளர்களின் உரிமைகள் மற்றும் கடமை பொறுப்புகள் | 28 |
| 34. | பிற்சேர்க்கை – III: பதிவு செய்யப்படாத முதலீட்டு அறிவுரையாளர்களைப் பற்றிய எச்சரிக்கை | 29 |
| 35. | பிற்சேர்க்கை – IV: ASBA-இல் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டண இடைத்தளம் (UPI) | 32 |
| 36. | பிற்சேர்க்கை – IV: அருஞ்சொல் விளக்கத் திரட்டு | 34 |

வழங்கியவர்

भारतीय प्रतिभूति और विनिमय बोर्ड

**செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ் போர்டு ஆ.்.ப் இந்தியா**

***இலவச சுற்றறிக்கை வாசிப்புக்கு***

வாழ்த்துக்கள் மற்றும் வணக்கம்…
ஒரு நிறுவனத்தின் பங்குகளில் மற்றும் பத்திரங்கள் சந்தையின் பரஸ்பர நிதி ஆகியவற்றில் முதலீடு செய்ய விரும்பும் ஒரு முதலீட்டாளரா நீங்கள்? ஆம் என்றால், பத்திரங்கள் சந்தையில் முதலீடு செய்வதன் அடிப்படைகளைப் பற்றி நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த சிற்றேடானது எந்தவொரு குறிப்பிட்ட முதலீட்டுக்கும் வழிகாட்டியாக செயல்படாது. ஆனால் இது பத்திரங்கள் சந்தையைப் பற்றிய அடிப்படை தகவல்களைத் தரும். இந்த சிற்றேடானது இந்திய ரிசர்வ் வங்கி (RBI), இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சிக்கான ஆணையம் (IRDAI), ஓய்வு ஊதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சிக்கான ஆணையம் (PFRDA), பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் (MCA) போன்ற பிற ஒழுங்குமுறைகளின் கட்டமைப்பின் கீழ் உள்ள நிறுவனங்களில் முதலீடு செய்வது குறித்தது அல்ல.

**பத்திரங்கள் சந்தைக்கான முறைபடுத்தும் கட்டமைப்பு**

ஒரு நிறுவனத்தின் பங்குகள், மியூசுவல் .்.பண்ட்ஸ், கிளைதிட்டங்கள் ஆகியவற்றின் யூனிட்டுகள் போன்ற பத்திரங்களை, வாங்குவது, விற்பது மற்றும் கையாள்வது மற்றும் பங்குச் சந்தைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவது 1992, SEBI சட்டத்தின்படியும், மற்றும் பல்வேறு SEBI ஒழுங்குமுறைகள் / சுற்றறிக்கைகள் / வழிகாட்டுதல்கள் / கிளைதிட்டங்கள் (SEBI சட்டம்) போன்றவை சார்ந்தும், செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ் போர்டு ஆ.்.ப் இந்தியா (SEBI) வரம்புக்கு உட்பட்டதாகும்.

ஏப்ரல் 12, 1992-ல் SEBI சட்டத்தின் விதிகளுக்கு ஏற்ப SEBI நிறுவப்பட்டது. பத்திரங்களில் முதலீட்டாளர்களின் அக்கறை உரிமைகளைப் பாதுகாப்பதும், அதன் வளர்ச்சியை முன்னேற்றுவதும், பத்திர சந்தையையும், அதனுடன் இணைந்துள்ள அல்லது தற்செயலாக தொடர்புடைய விஷயங்களை கட்டுப்படுத்துவதுமே SEBI-யின் உரிமைக்கட்டளையாகும்.

தற்போது, "பத்திரங்கள் சந்தை"-யில் கட்டுப்படுத்தும் நான்கு பிரதான சட்டங்கள் பின்வருமாறு:

**a)** **SEBI சட்டம், 1992,** சட்டரீதியான அதிகாரங்களுடன் இது SEBI-க்கு பின்வருவனவற்றுக்காக அதிகாரமளிக்கிறது (i) பத்திரங்களில் முதலீட்டாளர்களின் அக்கறை உரிமைகளைப் பாதுகாத்தல் (ii) பத்திரங்கள் சந்தையின் வளர்ச்சியை மேம்படுத்துதல் (iii) பத்திரங்கள் சந்தையை ஒழுங்குமுறைப்படுத்துதல்.

**b)** **நிறுவனங்களுக்கான சட்டம், 2013,** இது பத்திரங்களை வழங்குதல், ஒதுக்கீடு செய்தல் மற்றும் மாற்றுதல் மற்றும் பொது மக்களுக்கு பத்திரங்களை வழங்குதல் தொடர்பான விஷயங்கள் ஆகியவற்றுக்கான ஒழுங்குமுறைகளை வழங்குகிறது;

**c)** **பத்திரங்களுக்கான ஒப்பந்த (கட்டுப்படுத்துதல்) சட்டம், 1956,** இது பங்கு சந்தையில் பத்திரங்களில் பரிவர்த்தனைகளின் அங்கீகாரம் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை வழங்குகிறது.

**d)** **வைப்பக (டெபாசிட்டரி) சட்டம், 1996,** இது டிமேட்டிரியலைஸ்டு (டிமேட்) பங்குகளின் உடைமை உரிமையை மின்னணு பராமரிப்பு செய்வதற்கு மற்றும் மாற்றுவதற்கு ஏற்றதாகிறது.

## என்ன?

**பத்திரங்கள் மற்றும் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?**

**பத்திரங்கள்** என்பது நிறுவனங்கள், நிதி அமைப்புகள் போன்றவற்றால் வழங்கப்படும் நிதிசார் ஆவணங்கள் ஆகும். அவை பண மதிப்பை பெற்றிருக்கும். பத்திரங்கள் பின்வருமாறு விரிவாக வகைப்படுத்தப்படுகின்றன:

**a.** **சாதாரணப் பங்குகள்** அல்லது பொதுவாக பங்குகள் என அழைக்கப்படுபவை, ஒரு நிறுவனத்தின் உடைமை உரிமையில் உள்ள பங்கை குறிப்பிடுகின்றன. ஒரு நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்யும் முதலீட்டாளர் பங்குதாரர் என அழைக்கப்படுகிறார் மற்றும் நிறுவனத்தின் லாபத்திலிருந்து கிடைக்கும் ஈவுத்தொகை போன்ற பெருநிறுவனங்களிலிருந்து கிடைக்கும் அனைத்து பலன்களையும் பெற உரிமையுடையவர், பங்கு என்ற தலைப்பில் பெறப்படுகிறது. நிறுவனத்தில் நடத்தப்படும் பொது சந்திப்பின் போது தீர்மானம் எடுப்பதற்கான செயல்முறைக்காக வாக்கு அளிப்பதற்கான உரிமையையும் பங்குதாரர் பெற முடியும்.

**b.** **கடன் பத்திரங்கள்** நிறுவனம் அல்லது நிதி நிறுவனத்தால் முதலீட்டாளரிடமிருந்து கடனாக பெறப்பட்ட, முதலீட்டாளருக்கு திருப்பி செலுத்த வேண்டிய பணத்தைக் குறிக்கிறது. கடன் பத்திரங்கள் கடனீட்டு ஆவணங்கள் அல்லது கடன் ஒப்பந்தப் பத்திரங்கள் (பாண்ட்) எனவும் அழைக்கப்படுகின்றன. கடன் பத்திரங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளருக்கு வட்டி பெறவும் மற்றும் அசலை திரும்பப் பெறவும் (அதாவது முதலீடு செய்யப்பட்ட பணம்) உரிமை உண்டு. கடன் பத்திரங்கள் ஒரு நிலையான காலத்திற்கு வழங்கப்படுகின்றன, அதன் முடிவில் பத்திரங்களை வழங்குபவரால் பத்திரங்களை மீட்டெடுக்க முடியும். கடன் பத்திரங்கள் பாதுகாக்கப்படலாம் (பிணையத் தொகையால் ஆதரிக்கப்படுகிறது) அல்லது பாதுகாக்கப்படாமலும் போகலாம்.


**c.** **கிளைதிட்டங்கள்** என்பது நிதிசார் ஆவணங்கள் ஆகும். இதன் மதிப்பு பங்குகள், கடன் பத்திரங்கள் போன்ற மற்றொரு சொத்தின் மதிப்பைப் பொறுத்து இருக்கும். பரிமாற்ற வர்த்தக கிளைபொருட்களின் முக்கிய வகைகள் முன்பேர வர்த்தகம் மற்றும் விருப்பத்தேர்வுகள் ஆகும்.

**d.** **மியூசுவல் ∴பண்ட்ஸ்** என்பது பல முதலீட்டாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணதிரட்டலால் ஆன நிதிசார் ஆவணங்கள் ஆகும். இந்த நிதிகள் அல்லது மியூசுவல் ∴பண்ட்ஸ், அதன்பிறகு, பங்குகள், கடன் ஒப்பந்தப் பத்திரங்கள், பண சந்தை ஆவணங்கள் மற்றும் இதர சொத்துகள் போன்ற பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகின்றன.

**பத்திரங்கள் சந்தை** என்பது முதலீட்டாளர்கள் (பொதுமக்கள்) சாதாரணப் பங்குகள், கடன் பத்திரங்கள், கிளை பொருட்கள், மியூசுவல் ∴பண்ட்ஸ் போன்ற பத்திரங்களை வழங்குவதன் மூலம் நிறுவனங்கள் நிதிகளை திரட்டக்கூடிய ஓர் இடமாகும். மேலும், முதலீட்டாளர்கள் பல்வேறு பத்திரங்களை (பங்குகள், ஒப்பந்த கடன் பத்திரங்கள் போன்றவை) வாங்கும் அல்லது விற்கும் ஓர் இடமுமாகும். பங்குகள் (அல்லது பத்திரங்கள்) ஒருமுறை பொது மக்களிடம் வழங்கப்பட்டுவிட்டால், அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தைகளில் பங்குகளை (அல்லது பத்திரங்கள்) நிறுவனம் பட்டியலிட வேண்டும். பத்திரங்கள் சந்தை என்பது மூலதன சந்தையின் ஒரு பகுதியாகும்.

பத்திரங்கள் சந்தையின் முதன்மையான செயல்பாடானது முதலீட்டாளர்களின் சேமிப்பிலிருந்து தேவைப்படுவோருக்கு ஒதுக்கீடு செய்வதே ஆகும். நிதி தேவைப்படும் நிறுவனங்களின் அல்லது நிதி அமைப்புகளின் பத்திரங்களில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும்போது இது செய்யப்படும். முதலீட்டாளர்கள் வட்டி, ஈவுத்தொகை, மூலதன மதிப்புயர்வு, போனஸ் போன்ற பலன்களை பெற உரிமை உண்டு. அதுபோன்ற முதலீடுகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.

பத்திர சந்தை என்பது இரண்டு இடைசார்ந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதிகளை பெற்றிருக்கிறது. அது பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:




**முதன்மை சந்தை:** நிறுவனம் அல்லது நிதி நிறுவனங்கள் புதிய பத்திரங்களை (பங்குகள், கடன்பத்திரங்கள், ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவை) பொது மக்களுக்கு வழங்குவதன் மூலமாக நிதிகளை (மூலதனம்) திரட்டும்போது இந்த சந்தையானது புதிய வழங்கல் சந்தை என்றும் அழைக்கப்படுகிறது.

இரண்டு முக்கிய வகையான பத்திரங்கள் வழங்குனர்கள் உள்ளனர்:

- **பெருநிறுவனங்கள் (நிறுவனங்கள்)** பிரதானமாக சமபங்கு ஆவணங்கள் (பங்குகள்) மற்றும் கடன் ஆவணங்கள் (ஒப்பந்தப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் போன்ற) போன்றவற்றை வழங்குகிறது.

- **அரசாங்கம்** (மத்திய மற்றும் மாநில) கடன் பத்திரங்கள் (தேதியிட்ட பத்திரங்கள் மற்றும் கருவூல உறுதிச்சீட்டுகள் ஆகியவற்றை வழங்குகிறது).

முதன்மை சந்தையில் வழங்கப்படும் வகைகளாவன:

**A.** **பொது வழங்கல்**: பத்திரங்கள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படுகிறது. யார் வேண்டுமானாலும் அதில் பங்களிக்கலாம். சம பங்குகளின் பொது வழங்கல் பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்:

**i** **ஆரம்ப பொது வழங்கல் (IPO)** பங்குகளின் முதல் பொது வழங்கலானது நிறுவனத்தால் செய்யப்படுகிறது. IPO-வானது பின்வரும் வடிவங்களில் இருக்கலாம்:

- பொது முதலீட்டாளர்களுக்கு நிறுவனத்தால் புதிய (ஃப்ரெஷ்) பங்குகள் வழங்கப்படுவது. இந்த வகையான வழங்கலில், என்ன காரணத்திற்காக வழங்கப்படுகிறதோ அதற்கு உபயோகிக்கப்படுவதற்காக முதலீட்டாளர்களின் நிதிகள் நிறுவனத்திற்கு செல்லும்.

- மேம்படுத்துநர்கள் (ப்ரொமோட்டர்) அல்லது நிதிசார் நிறுவனங்கள் அல்லது தங்களுடைய உடைமையை பொது மக்களுக்கு வழங்கும் வேறு எந்த ஒரு நபர் போன்ற ஏற்கனவே உள்ள பங்குதாரர்கள் இருக்கும்போது விற்பனைக்கான ஆ.ஃ.பர் வழங்கப்படும். இந்த வகையான வழங்கலில், முதலீட்டாளர்களின் நிதிகளானது பங்குகளை விற்பனை செய்பவர்களுக்கு செல்லுமே தவிர. நிறுவனத்திற்கு செல்லாது.

**ii** **பொது வழங்கலை பின் தொடர்தல் (FPO)**: ஏற்கனவே முன்பு IPO வழங்கியிருக்கும் வழங்குநர் அல்லது நிறுவனம் பத்திரங்களை புதிதாக வழங்குவது.

**B.** **முன்னுரிமைக்குரிய வழங்கல்:** இந்த வழங்கல் முறையில், மேம்படுத்துநர்கள் (ப்ரொமோட்டர்கள்), சூழ்ச்சித்திறம் வாய்ந்த முதலீட்டாளர்கள், பணியாளர்கள் போன்ற அடையாளம் காணப்பட்ட முதலீட்டாளர்களுக்கு பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

**C.** **உரிமைகள் வழங்கல்:** ஏற்கனவே உள்ள பங்குதாரர்களுக்கு ஏற்கனவே உள்ள அவர்களது பங்குகளின் விகிதத்திற்கு ஏற்ப புதிதாக வழங்கப்பட்டுள்ள பங்குகளில் பங்களிப்பதற்கு நிறுவனம் உரிமை வழங்குவது உரிமை வழங்குதல் என்று அழைக்கப்படுகிறது.

**D.** **ஊக்கத்தொகை (போனஸ்) வழங்கல்:** நிறுவனத்தின் ஏற்கனவே உள்ள பங்குதாரர்களுக்கு அவர்களது ஏற்கனவே உள்ள பங்குகளின் விகிதத்திற்கு ஏற்ப கூடுதல் செலவு எதுவும் இல்லாமல், கூடுதலான இலவச பங்குகளை வழங்குவது ஊக்கத்தொகை வழங்குதல் என்று அழைக்கப்படுகிறது.

பொது மக்களிடமிருந்து நிதிகளை திரட்டுவதற்காக, நிறுவனங்கள் SEBI-யுடன் ஒரு ஆ.ஃ.பர் ஆவணத்தை தாக்கல் செய்ய வேண்டும். அது ட்ரா.ஃ.ப்ட் ரெட் ஹெர்ரிங் தகவல் குறிப்பு (ப்ராஸ்பெக்டஸ்) அல்லது ட்ரா.ஃ.ப்ட் தகவல் குறிப்பு என அழைக்கப்படுகிறது. இந்த தகவல் குறிப்பானது நிறுவனத்தின் வரலாறு, ப்ரோமோட்டர்களின் விவரங்கள், வியாபார மாடல், நிறுவனத்தின் நிதிசார்ந்த வரலாறு, அந்த வியாபாரத்தில் உள்ள சிரமங்கள், எந்த நோக்கத்திற்காக பணம் திரட்டப்படுகிறது, வழங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்வதைப் பற்றி முதலீட்டாளர் தீர்மானம் எடுக்க உதவியாக இருக்கும் இதர தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கும். முதன்மை சந்தையில் வழங்கப்படும் பத்திரங்கள், வழங்கிய நாளிலிருந்து அடுத்த ஆறு பணி நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட பங்குச்சந்தை பரிமாற்றத்தில் பட்டியலிடப்பட வேண்டும். பின்னர் இந்த பங்குகள் மேலும் பங்குகள் வர்த்தகம் நடைபெறுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தை பரிமாற்றங்களில் பட்டியலிடப்படும்.

நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள், SEBI-யால் அங்கீகரிக்கப்பட்ட வைப்புத்தொகை பங்கேற்பாளர் (DP) மூலமாக முதலீட்டாளரின் டிமேட் கணக்கில் வரவு வைக்கப்படும்.

ஒரு முதலீட்டாளர் SEBI-யின் அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தரகர் மூலமாக பங்குச் சந்தை பரிமாற்றத்தில் பங்குகளை விற்று பணத்தைப் பெற முடியும்.

இரண்டாம்நிலை சந்தை: முதன்மை சந்தையில் பத்திரங்கள் வழங்கப்பட்டதும், அவை பங்குச் சந்தை பரிமாற்றங்களில் பட்டியலிடப்படும். பங்குச் சந்தை பரிமாற்றங்கள் மூலமாக முதலீட்டாளர்கள் இத்தகைய பத்திரங்களை வாங்கவோ அல்லது விற்கவோ முடியும். பங்கு பரிமாற்றங்களின் பிரதானமான இரண்டு பகுதிகள் உள்ளன. அவை பணச் சந்தை பிரிவு மற்றும் கிளைதிட்டங்கள் பிரிவு.

## யார்?

**பத்திரங்கள் சந்தையில் சந்தை உள்கட்டமைப்பு நிறுவனங்கள் மற்றும் சந்தை இடைத்தரகர்கள் யார்?**

**சந்தை உள்கட்டமைப்பு நிறுவனங்கள்:** பத்திரச் சந்தையில் பரிவர்த்தனைகளை (அதாவது பத்திரங்களை வழங்குதல் வாங்குதல் மற்றும் விற்றல்) எளிதாக்குவதற்கான உள்கட்டமைப்பானது பங்குச் சந்தைகள், வைப்புத்தொகைகள் மற்றும் தீர்வக நிறுவனங்களால் வழங்கப்படுகிறது. இந்த நிறுவனங்கள் சந்தை உள்கட்டமைப்பு நிறுவனங்கள் (MIIs) என்று அழைக்கப்படுகின்றன. SEBI-யில் பதிவு செய்யப்பட்ட சந்தை உள்கட்டமைப்பு நிறுவனங்களின் (MIIs) பட்டியல்: https://www.sebi.gov.in/intermediaries.html. என்ற இணைப்பில் கிடைக்கிறது.

**பங்குச் சந்தை பரிமாற்றங்கள்**, அவற்றின் பதிவு செய்யப்பட்ட பங்கு தரகர்கள் மூலமாக, சந்தையில் நியாயமான முறையில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும், பத்திரங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும், நாடு முழுவதுமான கணினிமயமாக்கப்பட்ட திரை அடிப்படையிலான வர்த்தக தளத்தை வழங்குகின்றன. இந்தியாவில் SEBI-ஆல் அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தைகளின் பட்டியலானது https://www.sebi.gov.in/stock-exchanges.html என்ற இணையத்தளத்தில் கிடைக்கிறது. BSE லிமிடெட் (BSE), நேஷனல் ஸ்டாக் எக்ஸ்ச்சேஞ் ஆ.்.ப் இந்தியா லிமிடெட் (NSE) மற்றும் மெட்ரோபாலிட்டன் ஸ்டாக் எக்ஸ்ச்சேஞ் ஆ.்.ப் இந்தியா லிமிடெட் (MSE) ஆகியன நாடு தழுவிய முக்கிய பங்குச் சந்தைகளாகும்.

**தீர்வக பெருநிறுவனங்கள்:** தீர்வக பெருநிறுவனங்களின் முக்கிய செயல்பாடானது பங்குச் சந்தைகளில் செயல்படுத்தப்படும் வர்த்தகங்களின் தீர்வுக்கு உத்திரவாதம் அளிப்பதாகும். வேறு விதமாக சொல்வதென்றால், வாங்குபவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் வாங்கிய பத்திரங்கள் கிடைக்கும் என்றும், ஒவ்வொரு பத்திர விற்பனையாளரும் அவர் விற்கும் பத்திரங்களுக்கு பணம் பெறுவார்கள் என்றும் தீர்வக பெருநிறுவனங்கள் உத்திரவாதம் அளிக்கின்றன.

**வைப்பகங்கள்:** வைப்பகங்கள் என்பது முதலீட்டாளர்களின் பத்திரங்களை டிமேட்டிரியலைஸ் / மின்னணு வடிவத்தில் வைத்திருக்கும் மற்றும் முதலீட்டாளர்களுக்கு அவர்களின் டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்கள் (DP) மூலம் டிமேட் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் ஆகும். நம் நாட்டில் இரண்டு வைப்பகங்கள் உள்ளன. அவை, நேஷனல் செக்யூரிட்டிஸ் டெப்பாசிட்டரி லிமிடெட் (NSDL) மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL). ஒவ்வொரு வைப்பகத்தின் கீழும், பதிவு செய்யப்பட்ட டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்கள் (DPs) (வங்கிகளின் கிளைகள் போன்ற) உள்ளன. அவை முதலீட்டாளர்களுக்கு ஒரு டிமேட் கணக்கைத் தொடங்குதல் மற்றும் பராமரித்தல், பங்குகளை டிமேட்டிரியலைஸ் செய்தல் போன்ற பல்வேறு சேவைகளை வழங்குகின்றன.

முதன்மை மற்றும் இரண்டாம்நிலை சந்தையின் சீரான செயல்பாட்டிற்கு **சந்தை இடைத்தரகர்கள்** முக்கியமான பங்கேற்பாளர்கள் ஆவர். பத்திரங்களை வாங்குவது அல்லது விற்பது, பத்திரங்களைக் கையாள்வது மற்றும் பத்திரங்களின் வர்த்தகத்துடன் தொடர்புடைய தகவல்களை தருவது போன்ற செயல்களுக்கு இவர்கள் உதவியாக உள்ளனர். இதில் பங்கு தரகர்கள், வைப்புத்தொகை பங்கேற்பாளர்கள், வணிக வங்கியாளர்கள், பங்கு மற்றும் பரிமாற்ற முகவர்கள், பதிவாளர்கள் போன்றவர்கள் இவர்களில் முக்கியமான சிலர் ஆவர். அனைத்து இடைத்தரகர்களும் SEBI-யில் பதிவு செய்யப்பட்டுள்ளனர் மற்றும் முதலீட்டாளர்களைப் பாதுகாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளை இவர்கள் பின்பற்ற வேண்டும். SEBI-யால் அங்கீகரிக்கப்பட்ட சந்தை இடைத்தரகர்களின் பட்டியலை பின்வரும் இணையத்தளத்தில் காணலாம். http://www.sebi.gov.in.

**முதலீடு செய்வதன் அடிப்படைகள்**



நீங்கள் பத்திரச் சந்தையில் முதலீடு செய்யத் தொடங்குவதற்கு முன், உங்கள் முதலீட்டு இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் ஆபத்துகள் (நீங்கள் எந்த அளவு ஆபத்துகளை எதிர்கொள்ள தயாராக இருக்கிறீர்கள் என்ற எல்லை) போன்றவற்றைப் புரிந்துகொண்டு அடையாளம் காண வேண்டும். ஒவ்வொரு முதலீட்டு தீர்மானமும் உங்கள் தேவைகளையும் கட்டாயங்களையும் பிரதிபலிக்க வேண்டும். மேலும் நீங்கள் எடுக்கும் தீர்மானம் உங்களின் விருப்பப்படியே இருக்க வேண்டும். உதாரணமாக, நிலையான வருமானத்தைத் தரும் பாதுகாப்பான திட்டங்களில் நீங்கள் முதலீடு செய்யத் தயாராக இருக்கிறீர்களா அல்லது சற்று அதிக ஆபத்தை எதிர்கொண்டு, அதிக வருமானத்தைத் தரக்கூடிய திட்டங்களில் முதலீடு செய்ய விரும்புகிறீர்களா என்பதை தீர்மானிக்க வேண்டும். ஒவ்வொரு முதலீடும் அந்த முதலீட்டின் மதிப்பில் உள்ளார்ந்த மாற்றங்களுடன் சேர்த்து அபாயத்துடனும் வருகிறது.

உதாரணமாக, ஆட்டோமொபைல் துறையின் பங்குகளில் முதலீடு செய்வது என்பது ஆட்டோமொபைல் துறையுடன் இணைக்கப்பட்ட ஆபத்துடன் சேர்ந்து தான் இருக்கும் (விற்பனை உயரலாம் அல்லது சரியலாம் அல்லது ஒரு பிராண்ட் கார்கள் மற்ற பிராண்ட்களை விட அதிகமாக விற்கப்படலாம்). உங்கள் இலக்குகளை நீங்கள் தீர்மானித்ததும், நீங்கள் எந்த அளவு துணிச்சலாக செயல்பட விரும்புகிறீர்கள் என்பதை அடையாளம் கண்டதும், தயவுசெய்து நீங்கள் முதலீடு செய்ய விரும்பும் தொகை மற்றும் நீங்கள் முதலீடு செய்ய விரும்பும் கால அளவு ஆகியவற்றை தீர்மானிக்கவும். ஆபத்தை சந்திக்கும் திறன் என்பது ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் வேறுபடுகிறது. அது அந்த முதலீட்டாளரின் வயது மற்றும் அவரது குறிக்கோள்கள் ஆகியவற்றைப் பொறுத்தும் அமைகிறது.

முதலீட்டாளர்கள் தங்களது உரிமைகள், பொறுப்புகள், செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றியும் அவர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும், மேலும் இது தொடர்பான ஆவணங்கள் SEBI மற்றும் பங்குச் சந்தைகளின் வலைத்தளங்களில் கிடைக்கின்றன. பத்திரச் சந்தையில் முதலீடு செய்வதற்கு செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை இந்த சிற்றேட்டின் **பிற்சேர்க்கை-I-** இல் இணைக்கப்பட்டுள்ளன. அதோடு கூடுதலாக, முதலீட்டாளர்களின் உரிமைகள் மற்றும் கடமை பொறுப்புகள் என்ன என்பதும் இந்த கையேட்டின் **பிற்சேர்க்கை-II-** இல் இணைக்கப்பட்டுள்ளன.

ஒரு நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு முன் முதலீட்டாளர்கள் தகவலறிந்த முடிவை எடுக்க வேண்டும். நிறுவனம் தொடர்பான தெளிவான விஷயங்கள், அதன் ப்ரோமோட்டர்கள், திட்ட விவரங்கள், நிதிசார்ந்த விவரங்கள் போன்ற அனைத்து தகவல்களையும் அவர்கள் கவனமாக படிக்க வேண்டும். இது தொடர்பான அனைத்து தகவல்களையும் பங்குச் சந்தைகளின் இணையத்தளங்களில் பார்க்க முடியும்.

பத்திர சந்தையில் முதலீடு செய்ய, முதலீட்டாளர்கள் SEBI-யில் பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு முதலீட்டு ஆலோசகரையும் அணுகலாம். SEBI-யில் பதிவு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகரின் பட்டியலானது பின்வரும் இணையத்தளத்தில் கிடைக்கலாம். https://www.sebi.gov.in.

ஆயினும், பதிவு செய்யப்படாத முதலீட்டு ஆலோசகர்களிடமிருந்து பெறப்படும் வேண்டாத ஆலோசனைகள் குறித்து முதலீட்டாளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விவரங்களுக்கு, இந்த சிற்றேட்டின் **பிற்சேர்க்கை-III-**ஐ நீங்கள் பார்க்கலாம்.

**பத்திரங்கள் சந்தையில் முதலீடு செய்வதில் உள்ள முக்கிய ஆபத்துகள்:**

- **சந்தை ஆபத்து அல்லது முறைப்படுத்தப்பட்ட ஆபத்து:** நிதிச் சந்தைகளின் ஒட்டுமொத்த செயல் திறன் மற்றும் நாட்டின் பொதுவான பொருளாதாரத்தை பாதிக்கும் காரணிகளால் முதலீட்டாளர் இழப்புகளை சந்திக்க நேரிடும் என்று குறிப்பிடுகிறது.

- **முறைப்படுத்தப்படாத ஆபத்து:** ஒரு குறிப்பிட்ட நிறுவனம் அல்லது தொழிற்சாலையுடன் இணைக்கப்பட்டுள்ள நிலையற்ற தன்மை என்பது முறைப்படுத்தப்படாத ஆபத்தாக இருக்கலாம்.

- **பணவீக்க ஆபத்து:** பணவீக்க ஆபத்து என்பது கொள்முதல் செய்யும் அதிகார ஆபத்து என்றும் அழைக்கப்படுகிறது. பணவீக்கம் காரணமாக கொள்முதல் செய்யும் அதிகாரம் குறைந்து, முதலீட்டில் இருந்து வரும் பணப் புழக்கங்களானது எதிர்காலத்தில் அவற்றின் மதிப்பை இழக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

- **பணப்புழக்க ஆபத்து:** ஒரு முதலீட்டை விரைவாக வாங்கவோ விற்கவோ முடியாதபோது எளிதில் பணமாக்க இயலாத ஆபத்து ஏற்படுகிறது.

- **வணிக ஆபத்து:** ஏதேனும் சாதகமற்ற செயல்பாட்டு, சந்தை அல்லது நிதிசார் நிலைமை காரணமாக ஒரு நிறுவனத்தின் வணிகம் பாதிக்கப்படக்கூடும் அல்லது செயல்பாடுகளை நிறுத்தக்கூடும் எனக் குறிப்பிடப்படுகிறது.

- **அழிதன்மை ஆபத்து:** நிறுவனங்களின் பங்கு விலைகள் காலப்போக்கில் ஏற்ற இறக்கமாக ஆவதால் அழிதன்மை ஆபத்து ஏற்படுகிறது.


- **நாணய ஆபத்து:** அந்நிய செலாவணி விகிதங்களில் ஏற்ற இறக்கம் தோன்றும்போது உண்டாகக்கூடிய இழப்புகள் பற்றிய அபாயத்தை இது குறிப்பிடுகிறது, ஒரு முதலீட்டாளர் அந்நிய செலாவணியில் முதலீடு செய்தாலோ அல்லது அந்நிய செலாவணி வர்த்தகம் செய்த முதலீடுகளின் போதோ அவர் நாணய ஆபத்தை எதிர்கொள்ளக் கூடும்.

**ஆபத்தை குறைப்பது எப்படி?**

முதலீட்டாளர்கள் வெவ்வேறு வழிகளில் ஆபத்தைக் குறைக்க முயற்சி செய்யலாம். சொத்து ஒதுக்கீடு என்பது ஒரு சூழ்ச்சித்திறமாகும். இதை உபயோகித்து, ஒரு முதலீட்டாளர் தங்கள் முதலீடுகளை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சொத்துப் பிரிவுகளில் பல்வகைப்படுத்துவதன் வாயிலாக ஆபத்தைக் குறைக்க முடியும்.

## பத்திரங்கள் சந்தையில் முதலீடு செய்வதற்கான முன் தேவைப்பாடுகள்

சம பங்குகளில் முதலீடு செய்ய, ஒரு முதலீட்டாளர் மூன்று கணக்குகளைத் திறக்க வேண்டும் அவை:



a) **வங்கிக் கணக்கு.**

b) அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தையின் SEBI-யில் பதிவு செய்யப்பட்ட பங்கு தரகரின் **வர்த்தக கணக்கு அல்லது தரகு கணக்கு**. இந்த கணக்கு பங்குச் சந்தைகளில் பத்திரங்களை வாங்கவும் விற்கவும் பயன்படுகிறது. ஒரு வர்த்தக கணக்கைத் தொடங்க, நீங்கள் கணக்கு தொடங்கும் படிவத்தை பூர்த்தி செய்து, வாடிக்கையாளரை அறிந்து கொள்ள தேவையான (KYC) ஆவணங்களில் கையொப்பமிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

கணக்கு தொடங்கும் படிவத்தை பூர்த்தி செய்யும்போது பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்:

- வெவ்வேறு பரிமாற்றங்களில் வர்த்தகம் செய்வதற்கான விருப்பங்களை குறிக்கும்போது நீங்கள் கையொப்பமிட வேண்டும்.
- உங்கள் கணக்குகளில் பொருந்தக்கூடிய அனைத்து செலவுகள் / கட்டணங்கள் / தரகு ஆகியவற்றை நீங்கள் கவனமாக அறிந்து, அதற்கான பதிவை வைத்திருக்க வேண்டும்.
- நீங்கள் வர்த்தகம் செய்ய விரும்பும் பிரிவுகளை அடையாளம் காண வேண்டும் (பணம், F&O, நாணய கிளைபொருட்கள் அல்லது வேறு ஏதேனும் பிரிவுகள்). கிளைபொருட்களில் வர்த்தகம் செய்வதற்கு கிளைபொருட்களைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டும்.
- தொடர் கணக்கு வசதி, அதிகாரப் பத்திரத்தை நிறைவேற்றுதல் போன்ற கூடுதல் வசதிகளை நீங்கள் பெற விரும்பினால், எதிர்காலத்தில் எந்தவொரு சர்ச்சையையும் தவிர்க்க நீங்கள் பங்கு தரகருக்கு குறிப்பிட்ட அங்கீகாரத்தை அளிக்க வேண்டும்.
- கணக்கு தொடங்கும் படிவத்தில் உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணை வழங்க வேண்டும். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய வர்த்தக புதுப்பிப்புகளைப் பற்றி உங்களிடம் தெரிவிக்க தரகர் மற்றும் பங்குச் சந்தைகள் இந்த தொடர்பு விவரங்களைப் பயன்படுத்துகின்றனர்.
- உங்கள் பதிவுகளுக்காக, கணக்கு தொடங்கும் படிவத்தின் நகலை நீங்கள் அவசியமாக கேட்டுப் பெற வேண்டும்.

c) **டிமேட் கணக்கு** பத்திரங்களை டிமேட்டிரியலைஸ்டு / மின்னணு வடிவத்தில் வைத்திருக்கும் வசதியை வழங்குகிறது. எந்தவொரு வைப்பகத்தின் வைப்புத்தொகை பங்கேற்பாளர் (DP) மூலமாகவும் டிமேட் கணக்கைத் தொடங்க முடியும்.

**டிமேட் கணக்கின் அடிப்படை சேவைகள் (BSDA):**

டிமேட் கணக்கின் அடிப்படை சேவைகள் என்பது ஒரே ஒரு டிமேட் கணக்கு (அனைத்து வைப்பகங்களிலும்) மட்டுமே வைத்திருக்கும் தனிநபர்களுக்கு வழங்கப்படும் டிமேட் கணக்கு வசதியானது, கடன் அல்லாத பத்திரங்கள் மற்றும் கடன் பத்திரங்களுக்கு மதிப்பு எந்த ஒரு நேரத்திலும் தலா ரூ.2 லட்சத்திற்கு அதிகமாக இருக்காது.

BSDA-க்கான வருடாந்திர பராமரிப்பு கட்டணங்கள் (AMC) கட்டமைப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| **பத்திர வகை** | **பங்குகளின் மொத்த மதிப்பு** | **கட்டணங்கள்** |
|---|---|---|
| கடன் அல்லாத பத்திரங்கள் | ரூபாய் 50,000/- வரை | AMC இல்லை |
| | ரூபாய் 50,001 முதல் ரூபாய் 2,00,000/- வரை | ரூபாய் 100/- வரை |
| கடன் பத்திரங்கள் | ரூபாய் 1,00,000/- வரை | AMC இல்லை |
| | ரூபாய் 1,00,001 முதல் ரூபாய் 2,00,000/- வரை | ரூபாய் 100/- வரை |

இது குறித்த சமீபத்திய விதிகளுக்கு SEBI இணையத்தளம் அல்லது அந்தந்த வைப்பகத்தை காணவும்.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று கணக்குகளின் கலவையானது (அதாவது ஒரு வங்கி கணக்கு, ஒரு டிமேட் கணக்கு மற்றும் வர்த்தக கணக்கு) பெரும்பாலும் "3-இன்-1" கணக்கு என குறிப்பிடப்படுகிறது. முதலீட்டாளர்கள் மேற்கூறிய மூன்று கணக்குகளை வெவ்வேறு வைப்புத்தொகை பங்கேற்பாளர் / தரகர் / நிறுவனத்துடன் தனித்தனியாகத் தொடங்கலாம் அல்லது அவர்கள் மூன்று கணக்குகளையும் ஒரே வசதியுடன் தொடங்கும் வசதியை வழங்கும் ஒற்றை வைப்புத்தொகை பங்கேற்பாளர் / தரகர் / நிறுவனத்தையும் அணுகலாம்.

SEBI-யில் பதிவு செய்யப்பட்ட பங்கு தரகர்கள் மற்றும் வைப்புத்தொகையாளர் பங்கேற்பாளர்களின் பட்டியல் SEBI-யின் அதிகாரப்பூர்வ இணையத்தளத்திலிருந்து (www.sebi.gov.in) அல்லது அந்தந்த பங்குச் சந்தைகள் அல்லது வைப்பகங்களின் வலைத்தளங்களிலிருந்து பெறப்படலாம்.

**கணக்கை தொடங்குவதற்கான செயல்முறை: உங்களது வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்வதற்கான (KYC) செயல்முறை**

டிமேட்/வர்த்தக/வங்கி கணக்கைத் தொடங்கும்போது, உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும். KYC என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்வோம், அது ஏன் கட்டாயமானது?

பண மோசடி தடுப்புச் சட்டம், 2002 மற்றும் அதன் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின் படி KYC கட்டாயமானது ஆகும். டிமேட் / வர்த்தக / வங்கி கணக்கைத் தொடங்கும்போது, வாடிக்கையாளர் அதிகாரப்பூர்வமாக செல்லுபடியாகும் ஆவணங்களை (OVDs) அடையாளச் சான்றாகவும் முகவரிக்கான சான்றாகவும் சமர்ப்பிக்க வேண்டும், மேலும் இந்த ஆவணங்கள் KYC தேவைகளின் ஒரு பகுதியாகும். பான் கார்டு / தனித்துவமான அடையாளம் (UID) (ஆதார்) / பாஸ்போர்ட் / வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் போன்ற தொடர்புடைய துணை பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் முதலீட்டாளர் தனது அடையாளத்தையும் முகவரியையும் நிலைநாட்ட முடியும். KYC படிவம் சமர்ப்பிக்கப்பட்டதும், ஒரு தனித்துவமான KYC அடையாள எண் (KIN) உருவாக்கப்பட்டு SMS / மின்னஞ்சல் மூலம் வாடிக்கையாளருக்கு தெரிவிக்கப்படுகிறது. KYC என்பது ஓரே முறை செய்யப்படும் செயல்முறை மற்றும் அனைத்து இடைத்தரகர்களுக்கும் செல்லுபடியாகும். பத்திரச் சந்தையில் மற்றொரு இடைத்தரகருடன் கணக்கைத் தொடங்கும்போது நீங்கள் மீண்டும் அதே செயல்முறைக்கு உட்படுத்தப்பட வேண்டியதில்லை.

**உதவிக்குறிப்புகள்:**

- கையொப்பமிடுவதற்கு முன் அனைத்து ஆவணங்களையும் படித்து புரிந்து கொண்டீர்கள் என்பதை உறுதி செய்துக் கொள்ளுங்கள்.
- எந்தவொரு வெற்றுக் காகிதங்களிலும் கையொப்பம் இடாதீர்கள்.
- எப்போதுமே கணக்கு தொடங்கும் ஆவணங்களின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவற்றை கவனமாக பார்த்துப் பின்பற்ற வேண்டும்.
- உங்கள் கணக்கில் பரிவர்த்தனைகள் குறித்த SMS மற்றும் மின்னஞ்சல் அலர்ட்களைப் பெற உங்கள் மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை வங்கி, வைப்புத்தொகை பங்கேற்பாளர் மற்றும் பங்கு தரகர் ஆகியோரிடம் பதிவு செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**அதிகாரப் பத்திரம்**

அதிகாரப் பத்திரம் என்பது அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆவணமாகும், ஏனெனில் இது உங்கள் உரிமைகள் மற்றும் உங்கள் கணக்குகள் மற்றும் பணத்தை வேறு ஒருவருக்கு வழங்கும் திறன் கொண்டது. பத்திரச் சந்தையில், ஒரு வாடிக்கையாளர் அதிகாரப் பத்திரத்தை பங்கு தரகருக்கு ஆதரவாக / பங்கு தரகர் மற்றும் வைப்புத்தொகை பங்கேற்பாளருக்கு ஆதரவாக அதிகாரத்தை வழங்கி தன்னுடைய டிமேட் கணக்கு மற்றும் வங்கிக் கணக்கை செயல்படுத்தலாம். அது, பங்குகளை வழங்குவதையும், நிதிகளை செலுத்துவதையும் அல்லது பெறுவதையும் எளிதாக்கும். SEBI-யின் வழிகாட்டுதலின்படி ஒரு குறிப்பிட்ட அதிகாரப் பத்திரம் (PoA), பங்கு தரகருக்கு அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளருக்கு ஆதரவாக அந்த வாடிக்கையாளரால் செயல்படுத்தப்படலாம்.

SEBI-யின் வழிகாட்டுதலின்படி, அதிகாரப் பத்திரத்தை வழங்க கையொப்பம் இடவேண்டும் என்பது கட்டாயமானது இல்லை. அதிகாரப் பத்திரத்தில் கையொப்பமிடுவது முற்றிலும் கட்டாயம் இல்லாதது மற்றும் தன்னார்வத்திலானதாகும் – அதிகாரப் பத்திரத்தில் கையொப்பமிடுவது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என நீங்கள் அறிந்தால், நீங்கள் அதில் கையெழுத்திடலாம். எந்த நேரத்திலும் நீங்கள் அதிகாரப் பத்திரத்தை ரத்து செய்யலாம்.

| |
|---|
| பங்கு தரகர் / வைப்புத்தொகை பங்கேற்பாளருக்கு ஆதரவாக நீங்கள் அதிகாரப் பத்திரத்தை (PoA) செயல்படுத்த விரும்பினால், தயவுசெய்து அந்தந்த அதிகாரப்பூர்வ இணையத்தளங்களில் கிடைக்கும் SEBI / பங்கு பரிமாற்றங்கள் / வைப்புத்தொகைகள் வழங்குகிற வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும். |

**நியமனம் செய்தல்**

நியமனம் செய்தல் என்பது ஒரு தனிநபர் முதலீட்டாளர் தனக்கு இறப்பு ஏற்பட்டால் தன்னுடைய டிமேட் கணக்குகளில் வைத்திருக்கும் பத்திரங்களின் உரிமை கோரல் அல்லது அவற்றின் மீட்பு செயல்பாடுகளுக்கு (பரஸ்பர நிதி அளவுகள் பொறுத்தவரை) ஒரு நபரை நியமனம் செய்ய உதவுகிற ஒரு வசதியாகும்.

**பத்திரங்கள் சந்தையில் நான் முதலீடு செய்வது எப்படி?**

**a. முதன்மை சந்தை மூலமாக முதலீடு செய்தல்**

ஒரு நிறுவனம் பொது வழங்கல் மூலம் பொது மக்களுக்கு பங்குகளை வழங்கும்போது, நீங்கள் தேவையான விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிப்பதன் மூலம் பங்குகளுக்கு விண்ணப்பிக்கலாம். பத்திரங்களை வழங்குவதற்காக, அதை வழங்கும் நிறுவனம் சில விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றைப் பின்பற்ற வேண்டும். ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள் DP-யுடன் பராமரிக்கப்படும் விண்ணப்பதாரரின் டிமேட் கணக்கில் வரவு வைக்கப்படும். பத்திரங்களை ஒதுக்கீடு செய்வது டிமேட் வடிவத்தில் செய்யப்படும். முதலீட்டாளர்கள் பின்னர் அவற்றை வேறு வடிவத்தில் மாற்றிக் கொள்ளலாம். பொது வழங்கல் நிறைவடைந்ததும், ஆறு (06) பணி நாட்களுக்குள், மேலதிக பங்கு வர்த்தகம் நடைபெறும் இடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள் அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்படும்.

**தயவுசெய்து கவனிக்கவும்:**

சமீபத்திய SEBI வழிகாட்டுதல்களின்படி, பங்குச் சான்றிதழ்கள் போன்ற பத்திரங்களை முழுமையான வடிவத்தில் அல்லது டிமேட் வடிவத்தில் வைத்திருப்பதா என்பதை நீங்களே தேர்வு செய்யலாம். இருப்பினும், ஏப்ரல் 01, 2019 முதல் நடைமுறைக்கு வரும் நிலையில், டிமேட் வடிவத்தில் வைத்திருந்தால் மட்டுமே பத்திரங்களை மாற்ற முடியும். எனவே ஒரு டிமேட் கணக்கைத் தொடங்கி அனைத்து பத்திரங்களையும் டிமேட் வடிவத்தில் வைத்திருப்பது சிறந்தது. பங்குகள் தங்கள் சட்டப்பூர்வ பரம்பரை வாரிசுகளுக்கு அல்லது மரபுவழியாக அடுத்த தலைமுறைக்கு மாற்றப்பட வேண்டும் என்றால் இந்த விதி பொருந்தாது.

**முதன்மை சந்தையில் முதலீடு செய்வதற்கான செயல்முறை**

ஒரு நிறுவனத்தின் பங்குகளை நேரடியாக நிறுவனத்திடமிருந்து விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்வதன் மூலமும், பொதுவாக வழங்குதல் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெறும் நேரத்தில் பணம் செலுத்துவதன் மூலமும் வாங்கலாம். விண்ணப்ப படிவத்தில், பெயர், முகவரி, விண்ணப்பித்த பங்குகளின் எண்ணிக்கை, வங்கி கணக்கு விவரங்கள், பங்குகள் வரவு வைக்கப்பட வேண்டிய டிமேட் கணக்கு போன்ற விவரங்களை நீங்கள் நிரப்ப வேண்டும். அந்த IPO-வில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் பின்னர் தடை செய்யப்பட்ட தொகை (ASBA) ஆதரிக்கும் விண்ணப்பத்தின் மூலமாகவும், ஒருங்கிணைந்த கட்டண இடைத்தளம் (UPI)-ஐ ஒரு கட்டண இயக்கமுறையாகப் பயன்படுத்துவதன் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம் (பின்னர் விரிவாக சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது). அதன் பின்னர் முதலீட்டாளர்கள் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து, அவர்களின் விருப்பப்படி பங்குகளை ஒதுக்கீடு செய்ய விண்ணப்பிக்க வேண்டும். முதலீட்டாளர் விண்ணப்பித்த பங்குகளுக்கான தொகை, பின்னர் முதலீட்டாளரின் வங்கிக் கணக்கில் தடுக்கப்படும். ஒரு IPO-வை பட்டியலிடுவதற்கான முழு செயல்முறைக்கும், ஆறு (06) பணி நாட்கள் தேவைப்படும். பங்குகள் யாருக்கு வழங்கப்படுகிறதோ, அந்த முதலீட்டாளர்கள் தங்கள் டிமேட் கணக்கில் பங்குகளைப் பெற்றுக் கொள்வார்கள் மற்றும் அதற்கான நிதிகள் அவர்களுடைய வங்கிக் கணக்கிலிருந்து டெபிட் செய்யப்படும். பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால், விண்ணப்பிக்கும் முதலீட்டாளரின் வங்கிக் கணக்கில் தடைசெய்யப்பட்ட நிதி திரும்ப வழங்கப்படும்.

**எச்சரிக்கை குறிப்புகள்:**

- ஒரு நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு முன் நிறுவனத்தின் விவரக் குறிப்பேடு (ப்ராஸ்பெக்டஸ்) / ரெட் ஹெர்ரிங் விவரக் குறிப்பேடு / ஆ.்.பர் ஆவணத்தை கவனமாகப் படியுங்கள்.
- பொது வழங்கலில் உள்ள பங்குகளுக்கு விண்ணப்பிக்கும்போது பங்குகளின் விலை மற்றும் அளவு குறித்து உரிய கவனம் செலுத்துங்கள்.
- பங்குகளுக்கு நீங்கள் விண்ணப்பித்த விலையை குறித்து வைத்திருங்கள்.
- சந்தை உணர்ச்சிவயக் கருத்துக்களின் அடிப்படையில் முதலீடு செய்யாதீர்கள், மாறாக நிறுவனம் மற்றும் அதன் நிதி குறித்து பகுப்பாய்வு செய்து புத்திசாலித்தனமாக முதலீடு செய்யுங்கள்.


**வங்கி கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகையை நிறுத்திவைக்கும் ஒப்புதலை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் (ASBA)**

முதலீட்டாளர்கள் இப்போது ASBA மூலம் IPO-க்களில் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கலாம். ASBA-இல், முதலீட்டாளர் விண்ணப்பித்த பங்குகளின் அளவிற்கு பணம் தடுக்கப்படும், ஆனால் அது ஒதுக்கீடு செய்யப்படும் வரை உங்கள் கணக்கில் இருக்கும். பங்குகள் போன்றவற்றை ஒதுக்கீடு செய்யும்போது, தேவையான தொகை உங்கள் கணக்கிலிருந்து டெபிட் செய்யப்படும். தடுக்கப்பட்ட தொகை தொடர்ந்து வட்டி ஈட்டித் தருகிறது மற்றும் ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் பணத்தைத் திரும்பப் பெற வேண்டிய அவசியமில்லை. எனவே, IPO-க்களில் விண்ணப்பிப்பதற்கான காசோலையை உண்மையில் அனுப்புவதற்கு பதிலாக, சேகரிப்பு வங்கிகளின் சில கிளைகளால் வசதி செய்யப்பட்ட தடுக்கப்பட்ட தொகை (ASBA) ஆதரிக்கும் விண்ணப்பத்தின் மூலம் இப்போது விண்ணப்பிக்கலாம். இந்த வங்கிகளின் பட்டியல் SEBI-யின் இணையதளத்தில் கிடைக்கிறது. IPO-க்களில் ஒருங்கிணைந்த கட்டண இடைத்தளத்தை (UPI) பணம் செலுத்தும் இயங்குமுறையாகப் பயன்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்கள் இப்போது முதலீடு செய்யலாம். (UPI)-யைப் பயன்படுத்தி முதலீடு செய்வதற்கான செயல்முறை **பிற்சேர்க்கை-IV**-இல் விளக்கப்பட்டுள்ளது.

**b. இரண்டாம்நிலை சந்தை மூலமாக முதலீடு செய்தல்**

அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தையின் பங்கு தரகருடன் நீங்கள் ஒரு வர்த்தக / தரகு கணக்கைத் தொடங்கியவுடன், பங்குச் சந்தையில் பங்கு தரகர் மூலம் ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம் அல்லது விற்கலாம். இணையத்தள வர்த்தக கணக்கைப் பயன்படுத்தி உங்கள் தரகர் மூலம் பத்திரங்களை வாங்க அல்லது விற்பனை செய்வதற்கான ஆர்டரை நீங்கள் அனுப்பலாம். தரகரின் இணையத்தளம், தரகரின் மொபைல் வர்த்தக செயலியைப் பார்வையிடுவதன் மூலம், தொலைபேசி மூலம் அழைத்து செய்யும் வர்த்தக வசதியைப் பயன்படுத்தியும், தரகர் அலுவலகத்திற்கு நேரில் வருகை தருவதன் மூலமாகவும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தரகர்கள் மூலமாகவும் நீங்கள் அதை செய்யலாம்.

**ஆர்டர் வழங்குவதற்கான முறைகள்**




**எச்சரிக்கை குறிப்புகள்:**

- பங்குகளை வாங்குவது அல்லது விற்பது என்பது SEBI-யில் பதிவு செய்யப்பட்ட பங்கு தரகர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர் மூலமாக மட்டுமே செய்யப்பட வேண்டும்.
- இரண்டாம் நிலை சந்தையில் வர்த்தகம் செய்யும் போது, தரகரிடம் நீங்கள் தந்த ஆர்டர்களின் பதிவை எப்போதும் வைத்திருங்கள்.

**வர்த்தக நாட்கள் மற்றும் வர்த்தக & தீர்வு சுழற்சி**

பங்குச் சந்தைகளில் வர்த்தகம் வாரத்தின் அனைத்து நாட்களிலும் நடைபெறுகிறது (சனி, ஞாயிறு மற்றும் பங்குச் சந்தைகளால் அறிவிக்கப்பட்ட விடுமுறை நாட்கள் தவிர).

பங்குகளை வாங்கும்போது, தொடர்புடைய தீர்வுக்கான பணம் செலுத்தும் நாளுக்கு முன்னதாக உங்கள் பங்கு தரகரின் வங்கிக் கணக்கில் பணம் செலுத்த வேண்டும் (முன்னுரிமையாக உங்கள் கொள்முதல் ஆர்டர் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது என்று தரகரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட உடனேயே). இதேபோல், பங்குகளை விற்பனை செய்தால், சம்பந்தப்பட்ட தீர்வுக்கான கட்டணம் செலுத்தும் நாளுக்கு முன்னதாக நீங்கள் பங்குகளை தரகரின் டிமேட் கணக்கில் வழங்க வேண்டும்.

**பணம் செலுத்த வேண்டிய (பே-இன்) நாள் மற்றும் பணம் பெற வேண்டிய (பே-அவுட்) நாள் என்பது என்ன?** பணம் செலுத்த வேண்டிய (பே-இன் டே) நாள் என்பது பரிமாற்ற சந்தையின் தீர்வக நிறுவனத்திற்கு தரகர்கள் பணம் செலுத்துதல் அல்லது பத்திரங்களை வழங்குவதற்கான நாள் ஆகும். பணம் பெறும் நாள் என்பது தீர்வக நிறுவனம் தரகருக்கு பணம் செலுத்துதல் அல்லது பத்திரங்களை வழங்குவதற்கான நாள் ஆகும். தீர்வு சுழற்சி ஒரு T+2 ரோலிங் தீர்வு அடிப்படையில் ஏப்ரல் 01, 2003 (T என்பது வர்த்தக நாளைக் குறிக்கிறது) அன்று நடைமுறைக்கு வந்தது.

எடுத்துக்காட்டாக, ஒரு திங்கட்கிழமை செயல்படுத்தப்படும் வர்த்தகங்கள் பொதுவாக பின்வரும் புதன்கிழமை அன்று தீர்க்கப்படுகின்றன (வர்த்தக நாளிலிருந்து 2 பணி நாட்களைக் கருத்தில் கொண்டு). நிதிகள் மற்றும் பத்திரங்களை செலுத்துதல் மற்றும் பெறுதல் ஆகியவை T+2 நாளில் மேற்கொள்ளப்படுவதை பங்குச் சந்தைகள் உறுதி செய்கின்றன.

**நிதிகள் வழங்குதல்:** நிதிகள் அல்லது பத்திரங்களை வழங்குதல் என்பது நிதிகள் அல்லது பத்திரங்களை தரகர்களின் கணக்கிலிருந்து பரிமாற்றத்திற்கான கணக்கிற்கு மாற்றுவதாகும்.

**நிதி தருதல்:** நிதிகள் அல்லது பத்திரங்களை தருதல் என்பது பத்திரங்களுக்கான வர்த்தகம் செய்து முடிந்தவுடன், நிதிகள் அல்லது பத்திரங்களை தரகர்களின் கணக்கிலிருந்து வாடிக்கையாளரின் கணக்கிற்கு பரிமாற்றம் செய்வதாகும்.

**எச்சரிக்கை குறிப்புகள்:**

- வர்த்தக சுழற்சிக்காக பணம் செலுத்த வேண்டிய நாளுக்கு முன்பாக, போதுமான அளவு நிதிகள் அல்லது உங்களது வங்கியில் பத்திரங்கள் அல்லது டிமேட் கணக்கு போன்றவற்றை நீங்கள் வைத்திருக்கிறீர்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- பணம் செலுத்துவதற்கு போதுமான அளவு நிதிகள் அல்லது பத்திரங்கள் கிடைக்கவில்லை என்பது அபராதம் வசூலித்தல் மற்றும் முதலீட்டாளருக்கு நட்டங்கள் போன்றவை ஏற்பட வழிவகுக்கும்.

**ஒப்பந்தக் குறிப்பு**

ஒப்பந்த குறிப்பு என்பது பங்கு தரகர் செய்த வர்த்தகத்தின் சான்று ஆகும். இது வாங்கப்பட்ட / விற்கப்பட்ட பத்திரங்கள், வர்த்தகம் செய்யப்பட்ட விலை, வர்த்தகம் செய்த நேரம், தரகு போன்ற பரிவர்த்தனைகளின் விவரங்களைக் கொண்ட ஒரு சட்ட ஆவணமாகும். ஒப்பந்தக் குறிப்புகள் நேரடி வடிவத்தில் அல்லது மின்னணு வடிவத்தில் வழங்கப்படலாம். நீங்கள் ஒரு மின்னணு ஒப்பந்தக் குறிப்பைத் தேர்வு செய்தால், உங்கள் மின்னஞ்சல் id-யின் விவரங்களுடன் பங்கு தரகருக்கு ஒரு குறிப்பிட்ட அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். இத்தகைய மின்னணு ஒப்பந்தக் குறிப்புகள் டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்டு, குறிமுறையாக்கம் செய்யப்பட்டது. இதை சேதப்படுத்த முடியாது. இத்தகைய ஒப்பந்த குறிப்புகள் எதிர்கால குறிப்புகளுக்காக முதலீட்டாளரால் பாதுகாக்கப்பட வேண்டும். பின்னர் ஏதும் சர்ச்சை எழுந்தால் தேவைப்படும் என்பதால் இவை பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

**எச்சரிக்கை குறிப்புகள்:**

- வர்த்தகம் செயல்படுத்தப்பட்ட 24 மணி நேரத்திற்குள் பங்கு தரகரால் ஒப்பந்தக் குறிப்பு வழங்கப்படும். ஒப்பந்தக் குறிப்பில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், முதலீட்டாளர் உடனடியாக இந்த விஷயத்தை பங்கு தரகரிடம் தெரிவிக்க வேண்டும்.
- ஒப்பந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுடன் சந்தையில் ஆர்டர்களை வைக்கும்போது, நீங்கள் பராமரிக்கும் பதிவுகளை எப்போதும் மீண்டும் ஒருமுறை சரிபார்க்கவும். ஏதேனும் முரண்பாடு இருந்தால், உடனடியாக உங்கள் தரகரைத் தொடர்பு கொள்ளவும்.

**வாடிக்கையாளரின் ஆர்டர் குறித்த பதிவு:**

வாடிக்கையாளர் அத்தகைய ஆர்டரை கேட்டதற்கான ஆதாரங்களை வைத்த பின்னரே வாடிக்கையாளர்களின் வர்த்தகத்தை பங்கு தரகர்கள் செயல்படுத்த வேண்டும். மற்றவைகளுக்கிடையே அவை பின்வருமாறு இருக்கலாம்: a. வாடிக்கையாளரால் எழுதப்பட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட நேரடிப்பதிவு, b. தொலைபேசி பதிவு, c. அங்கீகரிக்கப்பட்ட மின்னஞ்சல் id-யிலிருந்து மின்னஞ்சல், d. இணைய பரிவர்த்தனைகளுக்கான பதிவு, e. மொபைல் போன்கள் மூலம் செய்திகளின் பதிவு, f. சட்டப்பூர்வமாக சரிபார்க்கக்கூடிய வேறு எந்தவொரு பதிவும்.

**முதலீட்டாளர்களுக்கு SMS மற்றும் மின்னஞ்சல் மூலமாக விழிப்பூட்டல்கள்**

முதலீட்டாளர்கள் SMS மற்றும் மின்னஞ்சல் விழிப்பூட்டல்கள் வசதியைத் தேர்வு செய்யலாம், இதன் மூலம் அவர்கள் வர்த்தக மற்றும் டிமேட் கணக்கில் நிகழும் எந்தவொரு வர்த்தக / பரிவர்த்தனை நடவடிக்கைகளுக்கும் இலவசமாக SMS மற்றும் மின்னஞ்சல் விழிப்பூட்டல்களைப் பெறுவார்கள். இந்த வசதியைப் பெறுவதற்கு, முதலீட்டாளர்கள் தங்கள் மொபைல் எண்கள் மற்றும் மின்னஞ்சல் id-களை தங்கள் பங்கு தரகர்கள் மற்றும் வைப்புத்தொகை பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். வேறு முகவரி புதுப்பித்தால் அதையும் அவர்களுக்குத் தவறாமல் தெரிவிக்க வேண்டும்.

**தொடர் கணக்கு அதிகாரமளிப்பு**

சாதாரணமாக, ஒரு தரகர் நிதிகள் / பத்திரங்கள் ஆகியவற்றுக்கு பணம் செலுத்திய (வாங்க / விற்க) 24 மணி நேரத்திற்குள் அதற்கான பரிவர்த்தனையை தீர்வு செய்ய வேண்டும். ஆயினும், நீங்கள் வழக்கமாக பங்குச் சந்தையில் பங்குகளில் வர்த்தகம் செய்தால், தொடர் கணக்கைப் பராமரிக்க குறிப்பாக பங்கு தரகருக்கு நீங்கள் அங்கீகாரம் வழங்கலாம். இதன் மூலம் உங்கள் பங்குகள் அல்லது நிதிகள் எதுவாக இருப்பினும் அது பங்கு தரகருடன் ஒரு தனி கணக்கில் வைக்கப்படும்.

தொடர் கணக்கு பத்திரங்களில் பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்கு உதவுகிறது. இதன்மூலம் பங்கு தரகருடன் தொடர் கணக்கில் வைக்கப்பட்டுள்ள பங்குகள் அல்லது நிதிகள் எதிர்கால பரிவர்த்தனைகளின் தீர்வு கடமை பொறுப்புகளின் போது உள்ள சூழ்நிலைகளுக்கு தக்கவாறு சரிசெய்யப்படுகின்றன.

| |
|---|
| தொடர் கணக்கு அதிகாரமளிப்பு என்பது தன்னார்வத்திலானது மற்றும் பத்திரங்களை அடிக்கடி வாங்கி விற்கும் முதலீட்டாளர்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும். தொடர் கணக்கு அதிகாரமளிப்பு என்பது தேதியிடப்பட்டு எந்த நேரத்திலும் திரும்பப் பெறக்கூடியதாக இருக்கும். நிதி மற்றும் பத்திரங்களின் உண்மையான தீர்வு குறைந்தது 30 நாட்களுக்கு / 90 நாட்களுக்கு ஒரு முறை வாடிக்கையாளரால் தேர்வு செய்யப்படும்படி தரகர் மூலமாக செய்யப்படும். |

**வர்த்தக சரிபார்ப்பு**

பரிமாற்றங்களின் வலைத்தளங்களில் வர்த்தக சரிபார்ப்பு தொகுதி உங்கள் கணக்கில் செயல்படுத்தப்படும் வர்த்தகங்களை சரிபார்க்க மிக எளிய கருவியாகும். வர்த்தகங்களின் தரவு T+1 நாளில் கிடைக்கும்.

**மார்ஜின் பணம் என்பது என்ன?**

மார்ஜின் பணம் பரிமாற்றங்கள் / தீர்வக கார்ப்பரேஷன்களால் பரிந்துரைக்கப்படுகிறது மற்றும் முதலீட்டாளர்களிடமிருந்து தரகர்களால் அவர்கள் சார்பாக ஒரு வர்த்தகத்தை செயல்படுத்துவதற்கு முன்பு சேகரிக்கப்படுகிறது. ஒரு முதலீட்டாளரால் நிதி செலுத்தப்படாத அல்லது பத்திரங்களை வழங்காத இடரை குறைக்க மார்ஜின் பணம் சேகரிக்கப்படுகிறது.

**பங்குத் தரகர் மற்றும் வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடமிருந்து கணக்கு விவர அறிக்கை**

நீங்கள் செய்த பரிவர்த்தனைகள் குறித்து தரகர்கள் மற்றும் வைப்புத்தொகையாளர்களிடமிருந்து வழக்கமான அடிப்படையில் மாதாந்திர அறிக்கை, காலாண்டு அறிக்கை போன்ற அறிக்கைகளை இலவசமாகப் பெற உங்களுக்கு உரிமை உண்டு. வைப்புத்தொகையாளர்கள் மற்றும் பங்குச் சந்தைகள், உங்கள் கணக்குகளில் உள்ள பரிவர்த்தனைகள் குறித்து உங்கள் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண் அல்லது மின்னஞ்சல் id-யில் உங்களுக்குத் தெரிவிப்பார்கள். உங்களுக்கு செய்தி புரியவில்லை என்றால், வங்கி, வைப்புத்தொகை சேமிப்பகம், வைப்புத்தொகை பங்கேற்பாளர், உங்கள் பங்குச் சந்தை, தரகர் ஆகியோருடன் விஷயத்தை தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள் அல்லது வழிகாட்டலுக்காக SEBI இன் கட்டணமில்லா ஹெல்ப்லைனை அழைக்கவும். உங்கள் தொடர்பு விவரங்களை இடைத்தரகர்களுடன் எப்போதும் அப்டேட் செய்துகொள்ளுங்கள், இதன்மூலம் நீங்கள் சரியான நேரத்தில் விழிப்பூட்டல்கள் மற்றும் கணக்கு அறிக்கைகளைப் பெறுவீர்கள். அத்தகைய அறிக்கையை நீங்கள் பெறவில்லை எனில், நீங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இந்த விஷயத்தை எழுப்ப வேண்டும்.

உங்கள் பங்கு தரகரிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி நிதி மற்றும் பத்திரங்களின் இருப்பு பற்றிய அறிக்கையைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு.

**தொகுக்கப்பட்ட கணக்கு அறிக்கை (CAS)**

தொகுக்கப்பட்ட கணக்கு அறிக்கை (CAS) என்பது ஒரு ஒற்றை / ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையாகும், இது ஒரு முதலீட்டாளர் ஒரு மாதத்தில் அனைத்து மியூசுவல் ∴பண்ட்ஸிலும் செய்த பரிவர்த்தனைகளின் விவரங்களையும், டிமேட் கணக்கில்(களில்) வைத்திருக்கும் பிற பத்திரங்களையும் காட்டுகிறது. உங்கள் CAS-ஐ பெற, உங்கள் பங்கு தரகர் / வைப்புத்தொகையாளருடன் உங்கள் பான் கார்ட் எண்ணை அப்டேட் செய்ய வேண்டும்.

**கிளைதிட்டங்கள் சந்தை**

கிளைதிட்டங்கள் என்பது ஒரு அடிப்படை பாதுகாப்பு அல்லது நிதிசார் ஆவணத்திலிருந்து அவற்றின் மதிப்பைப் பெறும் நிதிசார் ஆவணங்ளைக் குறிக்கிறது. அடிப்படை ஆவணங்கள் சமபங்கு, பண்டம், நாணயம் போன்றவையாக இருக்கலாம்.

கிளைதிட்டங்கள் முதன்மையாக தங்கள் நிலையை பாதுகாக்கவும் விலையேற்ற இடரை குறைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. ஹெட்ஜிங் என்பது அடிப்படையில் ஒரு இடர் நிர்வாக உத்தி ஆகும், இதில் முதலீட்டாளர்கள் எந்தவொரு பாதகமான விலை இயக்கங்களின் இடரையும் ஈடுசெய்ய சூழ்ச்சி திறம் வாய்ந்த திட்டங்களில் முதலீடு செய்கிறார்கள்.

கிளைதிட்டங்கள் உள்ள பங்கேற்பாளர்கள் ஹெட்ஜர்கள், ஊக வணிகர்கள் மற்றும் ஆர்பிட்ரேஜர்கள் மற்றும் வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு செயல் பங்குகளை வகிக்கப்படலாம்.

**∴ப்யூச்சர்ஸ் அண்டு ஆப்ஷன்ஸ்**, அல்லது பொதுவாக F&O பிரிவு என அழைக்கப்படுகின்றன, இது பத்திர சந்தையின் கிளைதிட்டங்கள் பிரிவின் ஒரு முக்கிய பகுதியாகும். ∴ப்யூச்சர்ஸ் அண்டு ஆப்ஷன்ஸ் இரண்டு வெவ்வேறு வகையான கிளைதிட்டங்கள்.

∴ப்யூச்சர்ஸ் ஒப்பந்தம் என்பது எதிர்கால தேதியில் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட விலையில் ஒரு அடிப்படை திட்டத்தை வாங்க அல்லது விற்க ஒரு தரநிலைப்படுத்தப்பட்ட பரிமாற்ற வர்த்தக ஒப்பந்தமாகும்.

ஆப்ஷன்ஸ் ஒப்பந்தம் என்பது நிதி ஆவணங்களைக் குறிக்கிறது, இது விருப்பத்தேர்வை வாங்குபவருக்கு உரிமையை அளிக்கிறது, ஆனால் முன் நிர்ணயிக்கப்பட்ட தேதி மற்றும் விலையில் விருப்பத்தேர்வை பயன்படுத்த வேண்டிய கடமை பொறுப்பு அல்ல. ஒரு கால் ஆப்ஷன் ஒருவருக்கு அடிப்படை பத்திரத்தை வாங்குவதற்கான உரிமையை அளிக்கிறது மற்றும் ஒரு புட் ஆப்ஷன் ஒருவருக்கு அடிப்படை பத்திரத்தை விற்க உரிமையை வழங்குகிறது. ஆப்ஷன்ஸ் ஒப்பந்தத்தை வாங்கும்போது முதலீட்டாளர்களிடம் பிரீமியம் வசூலிக்கப்படுகிறது.

| |
|---|
| கிளைதிட்டங்கள் அதிக இடர் நிறைந்த திட்டங்கள் மற்றும் முக்கியமாக ஹெட்ஜிங் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நினைவில் கொள்க. சில்லறை முதலீட்டாளர்களுக்கு இது பரிந்துரைக்கப்படவில்லை. |

**மியூசுவல் ∴பண்ட்ஸ்**

மியூசுவல் ∴பண்ட் பல முதலீட்டாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணதிரட்டலால் பெற்ற பணத்தை பங்குகள், கடன் ஒப்பந்தப் பத்திரங்கள், குறுகிய-கால பண சந்தை ஆவணங்கள் மற்றும் இதர பத்திரங்களில் அல்லது சொத்துகளில் முதலீடு செய்கின்றன. எந்தவொரு திட்டத்தையும் தொடங்குவதற்கு முன்பு அனைத்து மியூசுவல் ∴பண்ட்ஸ்-ம் SEBI-யில் பதிவு செய்யப்பட வேண்டும்.

மேலும் மியூசுவல் ∴பண்ட்ஸ் திட்டத்தின் நோக்கங்களின் அடிப்படையில் மியூசுவல் ∴பண்ட்ஸை வெவ்வேறு வகையினங்களில் பிரிக்கலாம். பல்வேறு வகையான முதலீட்டாளர்கள், இடரை தவிர்க்கும் முதலீட்டாளர்கள் (அடிப்படையில் அதிக இடரை ஏற்க விரும்பாத ஒரு பழமைவாத முதலீட்டாளர்), மிதமான முதலீட்டாளர்கள் (ஓரளவு இடரை ஏற்கக்கூடிய முதலீட்டாளர்கள்) மற்றும் எதிர்க்கும் சுபாவமுள்ள முதலீட்டாளர்கள் (அதிக வருவாயைத் தேடி அதிக இடரை ஏற்க விரும்பும் முதலீட்டாளர்கள்).

**மியூசுவல் ∴பண்ட்ஸை வகைப்படுத்தல்:** மியூசுவல் ∴பண்ட்ஸ் இப்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து திட்டங்களாக பரவலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:

a) சமபங்கு திட்டங்கள்: முக்கியமாக பங்குகள் / சமபங்குகளில் முதலீடு செய்யும் மியூசுவல் ∴பண்ட்ஸ்.

b) கடன் திட்டங்கள்: கடன் பத்திரங்கள் மற்றும் கருவூல உறுதிச்சீட்டுகள் போன்ற நிலையான வருமான பத்திரங்களில் முக்கியமாக முதலீடு செய்யும் மியூசுவல் ∴பண்ட்ஸ்.

c) கலப்பின திட்டங்கள்: சமபங்குகள், நிலையான வருமானம், ரொக்கப்பணம் போன்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொத்து வகைகளில் முதலீடு செய்யும் மியூசுவல் ∴பண்ட்ஸ்.

d) தீர்வு சார்ந்த திட்டங்கள்: பணி ஓய்வு மற்றும் குழந்தை திட்டமிடல் போன்ற தனிநபர்களின் குறிக்கோள்களுக்கு ஏற்ப முதலீடுகளைச் செய்யும் மியூச்சுவல் ∴பண்ட் திட்டங்கள்.

e) பிற திட்டங்கள்: குறியீட்டு நிதிகள், பரிவர்த்தனை வர்த்தக நிதிகள் (ETFs) போன்ற பிற அனைத்து திட்டங்களும்.

**மியூசுவல் ∴பண்ட்ஸில் எப்படி முதலீடு செய்வது?**

மியூசுவல் ∴பண்ட்ஸ் பொதுவாக புதிய திட்டங்களைத் தொடங்கும் தேதியை வெளியிட்டு செய்தித்தாள்களில் ஒரு விளம்பரத்துடன் வெளிவருகின்றன. முதலீட்டாளர்கள் தேவையான தகவல்கள் மற்றும் விண்ணப்ப படிவங்களுக்காக நாடு முழுவதும் பரவியிருக்கும் மியூசுவல் ∴பண்ட்ஸின் முகவர்கள் மற்றும் விநியோகஸ்தர்களை தொடர்பு கொள்ளலாம்.

மியூசுவல் ∴பண்ட்ஸில் முதலீடு செய்யும்போது, முதலீட்டாளர்கள் முதலில் தங்கள் KYC செயல்முறையை நிறைவு செய்ய வேண்டும். ஒரு முதலீட்டாளர் நிதியின் கிளையில் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் ஒரு KYC செய்ய முடியும். மாற்றாக, ஒரு தனிநபர் தனது ஆதார் அட்டை மற்றும் அவரது பான் எண்ணைப் பயன்படுத்தி e-KYC-யையும் செய்யலாம்.

KYC செயல்முறை முடிந்ததும், முதலீட்டாளர் தான் முதலீடு செய்ய விரும்பும் திட்டத்தை தீர்மானிக்க வேண்டும். இந்த முடிவு எதிர்கொள்ள முடிந்த இடர் மற்றும் நிதி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டது. முதலீட்டாளர் மியூசுவல் ∴பண்ட் திட்ட பட்டியலைக் குறைத்த பின், அந்தந்த திட்டங்களில் முதலீடு செய்வதற்கு தேவையான விண்ணப்ப படிவங்களை அவர் நிரப்ப வேண்டும். அத்தகைய சேவைகளை வழங்கும் முகவர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் மூலம் படிவங்களை மியூசுவல் ∴பண்டில் டெபாசிட் செய்யலாம். விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்யும் போது, ஒரு முதலீட்டாளர் தனது பெயர், முகவரி, விண்ணப்பித்த அலகுகளின் எண்ணிக்கை மற்றும் விண்ணப்ப படிவத்தில் தேவைப்படும் பிற தகவல்களை தெளிவாக குறிப்பிட வேண்டும். ஈவுத்தொகை அல்லது மறு கொள்முதல் நோக்கத்திற்காக மியூச்சுவல் ∴பண்டால் வழங்கப்படும் எந்தவொரு காசோலை / வரைவு மோசடியாக பணமாக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக அவர் தனது வங்கி கணக்கு எண்ணைக் கொடுக்க வேண்டும். பிற்காலத்தில் முகவரி, வங்கி கணக்கு எண் போன்றவற்றில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் மியூசுவல் ∴பண்டுக்கு உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும்.


முதலீட்டாளர்களுக்கான முதலீட்டு நடைமுறையை மேலும் எளிதாக்குவதற்காக, மியூசுவல் ∴பண்ட்ஸ் பின்வரும் விருப்பத்தேர்வுகளை வழங்குகின்றன:

1) **முறையான முதலீட்டு திட்டங்கள்:** ஒரு குறிப்பிட்ட திட்டத்தில் நிலையான தொகையை சீரான இடைவெளியில் முதலீடு செய்வதற்கான வசதி.

2) **முறையான திரும்பப் பெறுதல் திட்டங்கள்:** ஒரு குறிப்பிட்ட திட்டத்திலிருந்து நிலையான தொகையை சீரான இடைவெளியில் திரும்பப் பெறுவதற்கான வசதி.

3) **முறையான பரிமாற்றத் திட்டங்கள்:** ஒரு திட்டத்திலிருந்து மற்றொன்றுக்கு முறையான இடைவெளியில் நிதிகளை மாற்றுவதற்கான வசதி.

**மியூசுவல் ஃபண்ட்ஸின் திட்ட லேபிளிங்:** SEBI வழிகாட்டுதல்களின்படி, மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்கள் சம்பந்தப்பட்ட இடர் நிலைக்கு ஏற்ப லேபிளிடப்பட வேண்டும், அதனை ரிஸ்க்-ஓ-மீட்டரிலும் சித்தரிக்கப்பட வேண்டும்.
இடரின் வெவ்வேறு லேபிள்களைக் கொண்ட ரிஸ்க்-ஓ-மீட்டர் கீழே சித்தரிக்கப்பட்டுள்ளது:




**ரிஸ்க்-ஓ மீட்டர்**

a) குறைந்த அளவு: குறைந்த இடரில் அசல்

b) மிதமான குறைந்த அளவு: மிதமான குறைந்த இடரில் அசல்

c) மிதமான அளவு: அசலுக்கு மிதமான இடர்

d) மிதமான உயர் அளவு: மிதமான அதிக இடரில் உள்ள அசல்

e) அதிக அளவு: மிக அதிக இடரில் உள்ள அசல்

ஒரு குறிப்பிட்ட திட்டத்தில் முதலீடு செய்வதற்காக முகவர்கள் / விநியோகஸ்தர்கள் வழங்கிய கமிஷன் / பரிசுகளால் முதலீட்டாளர்களை மெய்மறக்கக்கூடாது. இருப்பினும் அதே சமயத்தில், அவர்கள் மியூசுவல் ஃபண்ட்ஸின் தட பதிவுகளை கருத்தில் கொள்ள வேண்டும் மற்றும் புறநிலை மற்றும் தகவலறிந்த முடிவுகளை எடுக்க வேண்டும்.

**பரிமாற்ற வர்த்தக நிதிகள் (ETF)**

எக்ஸ்சேஞ்ச் டிரேடட் ஃபண்ட் (ETF) என்பது ஒரு குறியீட்டு, பண்டம், கடன் பத்திரங்கள் அல்லது ஒரு குறியீட்டு நிதி போன்ற சொத்துக்களின் ஒரு தொகுப்பு ஆகியவற்றை கண்காணித்து பத்திர சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் ஒரு பத்திரமாகும். எளிமையாக சொல்வதென்றால், ETF நிதிகள் என்பது சென்செக்ஸ், நிஃப்டி போன்ற குறியீடுகளைக் கண்காணிக்கும் நிதிகள் ஆகும்.

நீங்கள் ஒரு ETF நிதியின் பங்குகள் / யூனிட்களை வாங்கும்போது, குறியீட்டின் செயல்திறனைக் கண்காணிக்கும் ஒரு போர்ட்∴போலியோவின் பங்குகள் / யூனிட்களை நீங்கள் உண்மையில் வாங்குகிறீர்கள். ETF நிதிகள் அவை கண்காணிக்கும் குறியீட்டின் செயல்திறனை தான் பிரதிபலிக்கின்றன.

வழக்கமான மியூசுவல் ∴பண்ட்ஸைப் போலல்லாமல், ETF நிதிகள் பங்குச் சந்தையில் ஒரு பொதுவான பங்கு போல வர்த்தகம் செய்யப்படுகின்றன மற்றும் செயல்பாட்டு வர்த்தகத்தின்படி ஒரு ETF நிதியின் விலை மாறுகிறது. ஒரு ETF நிதியின் வர்த்தக மதிப்பு அது பிரதிநிதித்துவப்படுத்தும் அடிப்படை பங்குகளின் நிகர சொத்து மதிப்பைப் பொறுத்தது. ETF நிதிகள், பொதுவாக, மியூச்சுவல் ∴பண்ட் திட்டங்களை விட அதிக தினசரி பணப்புழக்கம் மற்றும் குறைந்த கட்டணங்களைக் கொண்டுள்ளன.

**பத்திரங்கள் சந்தையில் குறையுற்றோர் குறை தீர்த்தல்**

**SEBI ஸ்கோர்ஸ் (SCORES), மத்தியஸ்தம் செய்யும் இயக்க முறை மற்றும் தவணை தவறியவர்கள் உரிமை கோருதல்**

பத்திர சந்தை தொடர்பான ஏதேனும் புகார் இருந்தால், நீங்கள் முதலில் சம்பந்தப்பட்ட இடைத்தரகர் அல்லது நிறுவனத்தை அணுகலாம். சம்பந்தப்பட்ட இடைத்தரகர் அல்லது நிறுவனம் உங்கள் குறையைத் தீர்க்க உதவும். குறை தீர்க்கப்படாவிட்டால், உங்கள் பங்கு தரகர் அல்லது பட்டியலிடப்பட்ட நிறுவனத்திற்கு எதிராக சம்பந்தப்பட்ட பங்குச் சந்தை எக்ஸ்சேஞ்ச் அல்லது டெப்பாசிட்டரியை அணுகலாம்.

குறைதீர்ப்பில் உங்களுக்கு இன்னமும் மனநிறைவு இல்லை என்றால், நீங்கள் ஸ்கோர்ஸ் (SCORES) (SEBI புகார்கள் குறை தீர்ப்பு அமைப்பு) எனப்படும் வலைதள அடிப்படையிலான மையப்படுத்தப்பட்ட குறைதீர்க்கும் தீர்வு மூலம் SEBI-யிடம் புகார் அளிக்கலாம். ஸ்கோர்ஸ் (SCORES) போர்ட்டலின் முகவரி http://scores.gov.in. ஸ்கோர்ஸ் (SCORES) பற்றி மேலும் அறிய, நீங்கள் SEBI கட்டணமில்லா ஹெல்ப்லைன் எண்களை அழைக்கலாம் - 1800 22 7575, 1800 266 7575. உங்கள் புகாரை பதிவு செய்யவும், பின்தொடரவும், ஆன்லைனில் புகார்(கள்) ஆன்லைனில் நிவர்த்தி செய்யப்படுவதை ட்ராக் செய்யவும் ஸ்கோர்ஸ் (SCORES) எந்த நேரத்திலும் மற்றும் எங்கிருந்தும் உங்களுக்கு உதவுகிறது.

**பங்கு சந்தையின் முதலீட்டாளர் சேவைகள் பிரிவு**

முதலீட்டாளர்களின் கேள்விகளைத் தீர்ப்பதன் மூலமும், முதலீட்டாளர்களின் புகார்களைத் தீர்ப்பதன் மூலமும், சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான மத்தியஸ்தம் பொறிமுறையை வழங்குவதன் மூலமும் முதலீட்டாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

NSE-யில் முதலீட்டாளர் குறைதீர்க்கும் குழு (IGRP) மற்றும் BSE லிமிடெட் மற்றும் MSE ஆகியவற்றில் முதலீட்டாளர் குறைதீர்க்கும் குழு (IGRP) மூலம் முதலீட்டாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய பங்கு பரிவர்த்தனைகள் உதவுகின்றன.

**மத்தியஸ்தம் செய்யும்முறை**

மத்தியஸ்தம் என்பது பங்கு தரகர் மற்றும் முதலீட்டாளருக்கு இடையிலான தகராறுகளைத் தீர்ப்பதற்கான ஒரு அரையளவு-நீதி செயல்முறையைக் குறிக்கிறது. ஒரு தரப்பினர் புகார் மற்ற தரப்பினரால் அல்லது பரிவர்த்தனையின் புகார் தீர்க்கும் செயல்முறை மூலம் திருப்திகரமாக தீர்க்கப்படவில்லை என்று உணரும்போது, தரப்பினர்கள் பங்குச் சந்தையில் கிடைக்கும் மத்தியஸ்த செயல்முறையின் வழியைத் தேர்வு செய்யலாம்.

முதலீட்டாளர் சேவை மையங்களின் பட்டியல், மத்தியஸ்த செயல்முறை மற்றும் சம்பந்தப்பட்ட செலவுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான கூடுதல் தகவலுக்கு, நீங்கள் அந்தந்த பங்குச் சந்தைகளின் வலைத்தளங்களைப் பார்வையிடலாம்.

**உரிமைக் கோரப்படாத அல்லது செலுத்தப்படாத தொகையைப் பற்றிய தகவல் – IEPF**

முதலீட்டாளர்களின் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கும் முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் நிறுவனச் சட்டம், 2013-இன் பிரிவு 125-ன் கீழ் முதலீட்டாளர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF) நிறுவப்பட்டுள்ளது. IEPF ஆணையம் என்பது ஒரு சட்டரீதியான அமைப்பாகும், இது நிறுவனங்கள் சட்டம், 2013-இன் விதிகளின் கீழ் அமைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகளாக செலுத்தப்படாத அல்லது உரிமை கோரப்படாத அனைத்து ஈவுத்தொகைகளும் பங்குகளும் அந்தந்த நிறுவனங்களால் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திற்கு (IEPF) மாற்றப்படுகின்றன. செலுத்தப்படாத ஈவுத்தொகை மற்றும்/அல்லது உரிமை கோரப்படாத பங்குகளைப் பெற முதலீட்டாளர் அல்லது அவரது பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கையை IEPF ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு, முதலீட்டாளர்கள் பார்வையிடலாம்
http://www.iepf.gov.in/IEPF/refund.html

பிற்சேர்க்கை – I

(பத்திரங்கள் சந்தையில் முதலீடு / வர்த்தகம் செய்வதற்கான செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை)

**செய்ய வேண்டியவை**

- பத்திர சந்தையில் உங்கள் முதலீட்டு தேவைகளுக்காக நீங்கள் ஒரு SEBI பதிவு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகருடன் கலந்து ஆலோசிக்கலாம்.
- உங்கள் முதலீட்டு நோக்கம் மற்றும் எதிர்கொள்ள முடிந்த இடர் ஆகியவற்றைப் பொறுத்து ஒரு திட்டம் / தயாரிப்பில் முதலீடு செய்யுங்கள்.
- பரிவர்த்தனை முடிந்த 24 மணி நேரத்திற்குள் செய்யப்படும் வர்த்தகங்களுக்கான சரியான ஒப்பந்த குறிப்பு / உறுதிப்படுத்தல் குறிப்பை பெற வலியுறுத்துங்கள். உங்கள் டிமேட் கணக்கில் உங்கள் போர்ட்∴போலியோவை தொடர்ந்து கண்காணிக்கவும்.
- கையொப்பமிடுவதற்கு முன் அனைத்து ஆவணங்களையும் கவனமாகப் படியுங்கள்.
- உங்கள் கணக்குகளில் பொருந்தக்கூடிய அனைத்து கட்டணங்கள் / செலவுகள் / தரகு ஆகியவற்றை நீங்கள் கவனமாகக் கவனித்து, அதற்கான பதிவை வைத்திருக்க வேண்டும்.
- கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள், கணக்கு அறிக்கைகள், பெறப்பட்ட ஒப்பந்த குறிப்புகள் மற்றும் பணம் செலுத்துதல் ஆகியவற்றின் பதிவை வைத்திருங்கள்.
- உங்கள் நிதித் தேவைகள் / குறிக்கோள்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, அவை இலக்கு அடையப்படுவதற்கு சாத்தியம் என்பதை உறுதிசெய்ய போர்ட்∴போலியோவை மறுஆய்வு செய்யுங்கள்.
- வங்கி சேனலைப் பயன்படுத்தி அதாவது ரொக்கப்பணத்தைக் கையாள்வது இல்லாமல் உங்கள் பரிவர்த்தனைகளுக்கு எப்போதும் பணம் செலுத்துங்கள்.
- உங்கள் தகவலை எப்போதும் புதுப்பித்துக் கொள்ளுங்கள். உங்கள் முகவரி அல்லது வங்கி விவரங்கள் அல்லது மின்னஞ்சல் ID அல்லது மொபைல் எண்ணில் மாற்றம் ஏற்படும் போதெல்லாம் உங்கள் பங்கு தரகர் / வைப்புத்தொகையாளருக்கு தெரிவிக்கவும். சிம் கார்டுகள் இப்போது வெவ்வேறு சேவை வழங்குநர்களுக்கு அனுப்பப்படும் அம்சத்தைக் கொண்டிருப்பதால், முதலீட்டாளர்கள் அந்தந்த கணக்குகளுடன் இணைக்கப்பட்ட ஒரே மொபைல் எண்களை வைத்திருக்கலாம். (அனைத்து முக்கியமான பரிவர்த்தனைகளுக்கும் மொபைல் எண் முக்கியமாகும்.)
- உங்கள் அனைத்து முதலீடுகளுக்கும் நியமன வசதியைப் பெறுங்கள். டிமேட் கணக்கில் பல நியமனங்கள் அனுமதிக்கப்படுகின்றன.
- உங்கள் தொடர் கணக்குகளை அவ்வப்போது தீர்த்துக் கொள்ளுங்கள் (நீங்கள் தேர்ந்தெடுத்தபடி, 30 / 90 நாட்களுக்கு ஒரு முறை).
- உங்கள் தொடர் கணக்கை வழக்கமாக சரிபார்க்கவும்.
- உங்கள் வர்த்தக கணக்கை அவ்வப்போது ஆராய்ந்து மதிப்பாய்வு செய்யவும்.

- அந்த நாளில் செய்யப்படும் வர்த்தகங்கள் தொடர்பாக எக்ஸ்சேஞ்சிலிருந்து தினசரி வரும் SMS மற்றும் மின்னஞ்சல்களை தவறாமல் பார்க்கவும்.
- வர்த்தக உறுப்பினருடன் பராமரிக்கப்படும் முதலீட்டாளர்களின் நிதி மற்றும் பத்திர இருப்புகள் குறித்து எக்ஸ்சேஞ்சிலிருந்து வரும் மாதாந்திர SMS மற்றும் மின்னஞ்சலை தவறாமல் பார்க்கவும்.

**செய்யக்கூடாதவை**

- முதலீட்டிற்காக பணத்தை கடனாக பெற வேண்டாம்.
- பதிவு செய்யப்படாத தரகர்கள் / பதிவு செய்யப்படாத பிற இடைத்தரகர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம்.
- ஒப்புக்கொண்ட தரகு / கட்டணங்களை விட இடைத்தரகருக்கு அதிகமாக பணம் செலுத்த வேண்டாம்.
- எந்தவொரு ஆவணத்தையும் அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை முழுமையாக புரிந்து கொள்ளாமல் இடைத்தரகர்களுடன் செயல்படுத்த வேண்டாம்.
- எந்த வெற்று படிவத்திலோ அல்லது டெலிவரி வழிமுறை சீட்டுகளிலோ கையொப்பமிட வேண்டாம்.
- பங்கு தரகர் / வைப்புத்தொகை பங்கேற்பாளருக்கு சாதகமாக பொது அதிகாரப் பத்திரம் (PoA) வழங்க வேண்டாம். நீங்கள் ஒரு PoA-ஐ வழங்க விரும்பினால், குறிப்பிட்ட ஒன்றை வழங்குவதன் மூலம் சரியான விடாமுயற்சியுடன் செயல்படுங்கள்.
- தகராறு ஏற்பட்டால், இடைத்தரகர் / பங்குச் சந்தை / SEBI-க்கு எழுத்துப்பூர்வ புகாரை நியாயமான நேரத்திற்குள் தாக்கல் செய்யுங்கள்.
- டப்பா வர்த்தகம் சட்டவிரோதமானது. நீங்கள் செலவுகளை சேமிக்கிறீர்கள் என்று தோன்றினாலும், பங்குச் சந்தைகளில் செய்யப்படும் பாதுகாப்பான மற்றும் உத்தரவாத வர்த்தகங்களின் எந்த நன்மையும் அளிக்காததால், டப்பா வர்த்தகத்தில் ஈடுபட வேண்டாம்.
- சந்தைப்படுத்த முடியாத பத்திரங்களை இறக்க விரும்பும் ஒரு நபர் அதில் ஈடுபடக்கூடும் என்பதால், ஹாட் டிப்ஸின் அடிப்படையில் உங்கள் முதலீட்டு முடிவுகளை எடுக்க வேண்டாம். ஹாட் டிப்ஸ்களைப் பரப்புவது கூட ஒரு சட்டவிரோத செயலாகும், இது குறித்து SEBI-க்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
- ஆன்லைன் கணக்கிற்கான உங்கள் கடவுச்சொல்லை யாருடனும் ஒருபோதும் பகிர வேண்டாம். கடவுச்சொற்களை அடிக்கடி மாற்றவும்.
- போன்ஸி திட்டங்கள், பதிவு செய்யப்படாத சிட் ∴பண்டுகள், பதிவு செய்யப்படாத கூட்டு முதலீடு அல்லது பதிவு செய்யப்படாத வைப்புத் திட்டங்களுக்கு இரையாக வேண்டாம்.
- உங்கள் KYC ஆவணங்களில் வெற்று இடங்களைத் அடித்துவிட மறக்காதீர்கள்.
- உங்களுக்கு கணினிகள் பற்றி பரிச்சயம் இல்லாவிட்டால், டிஜிட்டல் ஒப்பந்தங்களைத் தேர்வு செய்ய வேண்டாம்.

## பிற்சேர்க்கை – II

## (முதலீட்டாளர்களின் உரிமைகள் மற்றும் கடமை பொறுப்புகள்)

### முதலீட்டாளர்களின் உரிமைகள்

- தரகரிடமிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட தனித்துவமான க்ளைண்ட் குறியீட்டை (UCC) பெறுங்கள்.
- KYC மற்றும் செயல்படுத்தப்பட்ட பிற ஆவணங்களின் நகலை இடைத்தரகரிடமிருந்து பெறவும்.
- உங்கள் UCC-யில் மட்டுமே வர்த்தகங்களை செயல்படுத்தவும்.
- உறுப்பினருடன் ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகளை பூர்த்தி செய்வதற்கான உத்தரவை வைக்கவும்.
- சிறந்த விலையைப் பெறவும்.
- செயல்படுத்தப்பட்ட வர்த்தகங்களுக்கான ஒப்பந்தக் குறிப்பைப் பெறுங்கள்.
- விதிக்கப்படும் கட்டணங்களின் விவரங்களைக் கேட்கவும்.
- உரிய நேரத்தில் நிதி மற்றும் பத்திரங்களைப் பெறவும்.
- வர்த்தக உறுப்பினரிடமிருந்து கணக்குகளின் அறிக்கையைப் பெறவும்.
- கணக்குகளின் தீர்வு குறித்து கேட்கவும்.
- ஒப்புக்கொண்ட அட்டவணைப்படி அறிக்கைகளைப் பெறவும்.

### முதலீட்டாளர்களின் கடமை பொறுப்புகள்

- உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) என்ற ஆவணங்களை செயல்படுத்தவும் மற்றும் துணை ஆவணங்களை வழங்கவும்.
- வர்த்தக உறுப்பினருடன் ஏற்றுக்கொள்ளப்படும் தன்னார்வ நிபந்தனைகளைப் புரிந்துகொள்ளவும்.
- வர்த்தக உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உரிமைகளைப் புரிந்துகொள்ளவும்.
- இடர் வெளிப்படுத்தல் ஆவணத்தைப் படிக்கவும்.
- திட்டம் மற்றும் செயல்பாட்டு கட்டமைப்பு மற்றும் காலக்கெடுவைப் பற்றி புரிந்துகொள்ளவும்.
- உரிய நேரத்தில் மார்ஜின்களை செலுத்தவும்.
- உரிய நேரத்தில் தீர்வு காண நிதி மற்றும் பத்திரங்களை செலுத்துங்கள்.
- வர்த்தக விவரங்களை சரிபார்க்கவும்.
- நிதி மற்றும் பத்திரங்கள் இயக்கத்திற்காக வங்கி கணக்கு மற்றும் DP கணக்கை சரிபார்க்கவும்.
- ஒப்பந்த குறிப்புகள் மற்றும் கணக்கு அறிக்கையை மறுப்பாய்வு செய்யவும்.

**பிற்சேர்க்கை – III**

**பதிவு செய்யப்படாத முதலீட்டு அறிவுரையாளர்களைப் பற்றிய எச்சரிக்கை**

SEBI (முதலீட்டு ஆலோசகர்கள்) ஒழுங்குமுறைகள், 2013-இன் கீழ் முதலீட்டு ஆலோசகர்களை SEBI பதிவு செய்கிறது. ஒழுங்குமுறைகளின்படி, "முதலீட்டு ஆலோசகர்" என்பது வாடிக்கையாளர்கள் அல்லது பிற நபர்கள் அல்லது நபர்களின் குழுவுக்கு முதலீட்டு ஆலோசனைகளை வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும், எந்தவொரு பெயரிலும் தன்னை ஒரு முதலீட்டு ஆலோசகராக வைத்திருக்கும் எந்தவொரு நபரும் அடங்கும். எளிமையான சொற்களில், முதலீட்டு ஆலோசகர் என்பது முதலீட்டாளர்களுக்கு அவர்களின் தேவைகள், இடர் மற்றும் வருவாய் எதிர்பார்ப்புகளை அறிந்துகொண்டு முதலீட்டு முடிவுகளை எடுக்க உதவும் ஒரு நபர்.

"முதலீட்டு ஆலோசனை" என்பது வாடிக்கையாளரின் நன்மைக்காக எழுத்துபூர்வ, வாய்வழி அல்லது வேறு எந்த தகவல்தொடர்பு மூலமாகவும் பத்திரங்கள் அல்லது முதலீட்டு திட்டங்களில் முதலீடு செய்தல், வாங்குதல், விற்பனை செய்தல் அல்லது வேறுவிதமாகக் கையாள்வது தொடர்பான ஆலோசனைகளையும், பத்திரங்கள் அல்லது முதலீட்டு திட்டங்களைக் கொண்ட முதலீட்டு போர்ட்∴போலியோ பற்றிய ஆலோசனைகளையும், குறிக்கிறது மற்றும் இதில் நிதி திட்டமிடல் அடங்கும். செய்தித்தாள், பத்திரிகைகள், எந்தவொரு மின்னணு அல்லது ஒலிபரப்பு அல்லது தொலைத்தொடர்பு ஊடகம் மூலமாகவும் வழங்கப்படும் பொதுமக்களுக்கு பரவலாகக் கிடைக்கும் எந்தவொரு முதலீட்டு ஆலோசனையும் இந்த விதிமுறைகளின் நோக்கத்திற்காக முதலீட்டு ஆலோசனையாக கருதப்படாது.

முதலீட்டு ஆலோசகராக இருக்க, ஒருவர் SEBI-யிடம் பதிவு செய்து நடத்தை விதிகளைப் பின்பற்ற வேண்டும். SEBI பதிவு இல்லாமல் முதலீட்டு ஆலோசகராக செயல்படுவது சட்டவிரோதமானது. இதுபோன்ற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க SEBI ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சில நேர்மையற்ற மற்றும் அறியாத நிறுவனங்கள் தங்களை பதிவு செய்யாமல் போகலாம், அல்லது, நடத்தை விதிகளை பின்பற்றாமல் இருக்கலாம். முதலீட்டு ஆலோசகர்கள் அறிவுறுத்துவதற்கு தங்களை மட்டுப்படுத்த வேண்டும், அவர்கள் பணம் அல்லது பத்திரங்களை கையாளுவதில்லை.

SEBI-க்கு புகாரளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களாக (IA) செயல்படும் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பான சில முறைகேடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

- முதலீட்டு ஆலோசகர்களால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் உறுதி வருவாய்.
- நல்ல வருமானத்திற்கான தவறான வாக்குறுதியுடன் வாடிக்கையாளரிடமிருந்து மிக அதிகமாக கட்டணங்களை வசூலித்தல்.
- அதிக கட்டணம் சம்பாதிக்க வாடிக்கையாளரின் இடர் சுயவிவரத்தை பின்பற்றாமல் IA-களால் தவறாக விற்பனை செய்யப்படுவது. வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட இழப்பிற்கான கட்டணங்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான புகார்களைப் பெறும்போது, வாடிக்கையாளர்கள் தங்கள் இழப்புகளை மீட்டெடுப்பார்கள் என்ற உறுதிமொழியுடன் அதிக இடர் திட்டங்களை IA-க்கள் வழங்குகின்றன.
- வாடிக்கையாளர்கள் சார்பாக வர்த்தகம் செய்தல்.
- வாடிக்கையாளர் சுயவிவரத்துடன் பொருந்தாது மற்றும் வாடிக்கையாளரின் அனுமதியின்றி அதிக இடர் நிறைந்த திட்டங்களுக்கு சேவையை தானாக மேம்படுத்துதல் அல்லது மாற்றுவது.
- வாடிக்கையாளர்களுக்கு பண இழப்பை ஏற்படுத்தும் IA-களின் மோசமான சேவை.
- திருப்பித் தருதல் தொடர்பான சிக்கல்கள்.

சந்தையில் இருக்கும் மேற்கூறிய நடைமுறைகளுக்கு எதிராக முதலீட்டாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் மற்றும் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மூலதன சந்தைகளில் நிபுணத்துவம் இருப்பதாக கூறிக்கொள்ளும் நிறுவனங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவர்கள் கவனமாக இருக்க வேண்டும். SEBI (முதலீட்டு ஆலோசகர்) ஒழுங்குமுறைகள், 2013-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து மட்டுமே முதலீட்டாளர்கள் ஆலோசனை பெற அறிவுறுத்தப்படுகிறார்கள். அத்தகைய நிறுவனங்களின் பட்டியல் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கிறது: https://www.sebi.gov.in

**முதலீட்டு ஆலோசகர்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளும் போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை**

| செய்ய வேண்டியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| - SEBI பதிவு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களுடன் எப்போதும் நடவடிக்கை மேற்கொள்ளவும்.<br>- SEBI பதிவு எண்ணை சரிபார்க்கவும். அனைத்து SEBI பதிவு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களின் பட்டியல் SEBI இணையதளத்தில் கிடைக்கிறது (https://www.sebi.gov.in)<br>- முதலீட்டு ஆலோசகருக்கு செல்லத்தக்க பதிவு சான்றிதழ் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.<br>- உங்கள் முதலீட்டு ஆலோசகருக்கு ஆலோசனைக்கான கட்டணங்களை மட்டுமே செலுத்தவும்.<br>- ஆலோசனைக்கான கட்டணங்களை வங்கி சேனல்கள் மூலமாக மட்டுமே செலுத்துங்கள் மற்றும் உங்கள் பணம் செலுத்துதல்களின் விவரங்களைக் குறிப்பிட்டு முறையாக கையொப்பமிடப்பட்ட ரசீதுகளைப் பராமரிக்கவும்.<br>- முதலீட்டு ஆலோசனையை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு எப்போதும் உங்கள் இடர் விவரக்குறிப்பை கேட்கவும்.<br>- முதலீட்டு ஆலோசகர் உங்கள் இடர் விவரக்குறிப்பின் அடிப்படையில் கண்டிப்பாக ஆலோசனையை வழங்குவதை வலியுறுத்துங்கள் மற்றும் கிடைக்கக்கூடிய முதலீட்டு மாற்றுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளுங்கள்.<br>- தொடர்புடைய அனைத்து கேள்விகளையும் கேளுங்கள் மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் செயல்படுவதற்கு முன் உங்கள் முதலீட்டு ஆலோசகரிடம் உங்கள் சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளவும்<br>- முதலீடுகளைச் செய்வதற்கு முன் முதலீட்டின் இடர்-வருவாய் விவரக்குறிப்பு மற்றும் பணப்புழக்கம் மற்றும் பாதுகாப்பு அம்சங்களை மதிப்பிடுங்கள்.<br>- விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை எழுத்துபூர்வமாக பெற்று முறையாக கையொப்பமிட்டு முத்திரையிடப்படுவதை வலியுறுத்தவும். எந்தவொரு முதலீட்டு ஆலோசகருடனும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்பு இந்த விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் குறிப்பாக ஆலோசனைக்குரிய கட்டணம், ஆலோசனைத் திட்டங்கள், பரிந்துரைகளின் வகைகள் போன்றவற்றை கவனமாகப் படியுங்கள்.<br>- உங்கள் பரிவர்த்தனைகளில் விழிப்புடன் இருங்கள்.<br>- உங்கள் சந்தேகங்கள் / குறைகளை நிவர்த்தி செய்ய பொருத்தமான அதிகாரிகளை அணுகவும். உறுதிப்படுத்தப்பட்ட அல்லது உத்தரவாதமான வருமானத்தை வழங்கும் முதலீட்டு ஆலோசகர்களைப் பற்றி SEBI-க்குத் தெரிவிக்கவும் | - பதிவு செய்யப்படாத நிறுவனங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம்.<br>- முதலீட்டு ஆலோசனை என்ற சாக்கில் வழங்கப்படும் பங்கு உதவிக்குறிப்புகளை கருத வேண்டாம்.<br>- முதலீட்டு ஆலோசகரிடம் முதலீட்டிற்கான உங்கள் பணத்தை கொடுக்க வேண்டாம்.<br>- உறுதிப்படுத்தப்பட்ட வருமானத்தின் வாக்குறுதியை கருத வேண்டாம்.<br>- பகுத்தறிவுடன் எடுக்கப்படும் முதலீட்டு முடிவுகளை பேராசை வெல்ல அனுமதிக்காதீர்கள்.<br>- கவரும் விளம்பரங்கள் அல்லது சந்தை வதந்திகளை கருத்தில் கொள்ள வேண்டாம்.<br>- எந்தவொரு முதலீட்டு ஆலோசகர் அல்லது அதன் பிரதிநிதிகளிடமிருந்தும் தொலைபேசி அழைப்புகள் அல்லது செய்திகளின் அடிப்படையில் மட்டுமேயான பரிவர்த்தனைகளைத் தவிர்க்கவும்.<br>- முதலீட்டு ஆலோசகர்களின் தொடர்ச்சியான செய்திகள் மற்றும் அழைப்புகள் காரணமாக மட்டுமே முடிவுகளை எடுக்க வேண்டாம்.<br>- முதலீட்டு ஆலோசகர்கள் வழங்கும் வரையறுக்கப்பட்ட கால தள்ளுபடி அல்லது பிற ஊக்கத்தொகை, பரிசுகள் போன்றவற்றுக்கு இரையாக வேண்டாம்.<br>- உங்கள் இடர் கையாளும் திறன் மற்றும் முதலீட்டு இலக்குகளுடன் பொருந்தாத முதலீடுகளைச் செய்ய அவசரம் வேண்டாம். |

## பிற்சேர்க்கை – IV

## ASBA-இல் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டண இடைத்தளம் (UPI)

முதலீட்டாளர்கள் இப்போது IPO-க்களில் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டண இடைத்தளத்தை (UPI) பணம் செலுத்தும் வழிமுறையாகப் பயன்படுத்தலாம். UPI என்பது பல வங்கி கணக்குகளை ஒரே மொபைல் பயன்பாட்டில் (பங்கேற்கும் எந்தவொரு வங்கியிலும்), பல வங்கி அம்சங்கள், தடையற்ற நிதி பரிமாற்றங்கள் மற்றும் வணிகர் பணம் செலுத்துதல்களை ஒரே வழிமுறையாக இணைக்கும் ஒரு அமைப்பாகும்.

**UPI பயன்படுத்தி முதலீடு செய்வது எப்படி:**

UPI மூலம் IPO-வில் முதலீடு செய்வதற்கான செயல்முறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி 3 முக்கிய படிகளை உள்ளடக்கியது:

a) UPI மூலம் ஏலம் விடுதல்: முதலீட்டாளர்கள் ஏல விவரங்களை விண்ணப்ப படிவத்தில் தங்கள் UPI ID-யுடன் நிரப்ப வேண்டும். விண்ணப்பங்களை பங்குதாரர் ஏல தளத்தில் UPI ID-யுடன் ஏல விவரங்களை பதிவேற்றும் இடைத்தரகரிடம் சமர்ப்பிக்கலாம். பங்கு பரிவர்த்தனை ஏல விவரங்களை மின்னணு முறையில் முதலீட்டாளர்கள் UPI ID-யுடன் வழங்குபவர் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட எஸ்க்ரோ / ஸ்பான்சர் வங்கியுடன் பகிர்ந்து கொள்ளும்.

b) நிதிகளைத் தடுப்பது: விண்ணப்பதாரர் தொகைக்கு சமமான நிதியைத் தடுப்பதற்கும், ஒதுக்கீடு செய்தால் அடுத்தடுத்த நிதிகளை டெபிட் செய்வதற்கும் எஸ்க்ரோ / ஸ்பான்சர் வங்கி முதலீட்டாளரைக் கேட்டுக்கொள்ளும். முதலீட்டாளரின் தடுப்பு கோரிக்கையை சரிபார்த்த பிறகு, முதலீட்டாளர்களின் கணக்கில் நிதி தடுக்கப்படும், மேலும் முதலீட்டாளர்களுக்கு இது குறித்து தெரிவிக்கப்படும்.

c) பங்குகளுக்கான ஒதுக்கீடு செயல்முறைக்கு பிந்தைய பணம் செலுத்தல்: பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், முதலீட்டாளர்களின் கணக்கிலிருந்து நிதிகளை டெபிட் செய்யும் செயல்முறை நடைபெறும் மற்றும் அதிகப்படியான பணம் தடைசெய்யப்படும். நிதிகளைத் தடுக்கும் நேரத்தில் UPI பின்னைப் பயன்படுத்தி முதலீட்டாளர் வழங்கிய அதிகாரத்தின் அடிப்படையில் இந்த செயல்முறை நடைபெறும்.

**IPO-வில் முதலீடு செய்ய UPI பயன்படுத்தும் போது நினைவில் கொள்ள வேண்டியவை:**

- SEBI இணையதளத்தில் கிடைக்கும் ஒரு வழங்குநர் வங்கியாக செயல்பட தகுதியுள்ள 'சுய சான்றளிக்கப்பட்ட சிண்டிகேட் வங்கிகளின் பட்டியலில் (SCSB) பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வங்கியுடன் உங்கள் UPI ID-ஐ உருவாக்கவும்.

- SEBI இணையதளத்தில் கிடைக்கும் 'பொது வழங்கல்களில் UPI பயன்படுத்துவதற்கான மொபைல் பயன்பாடுகளின் பட்டியலில்) குறிப்பிடப்பட்டுள்ள அந்த மொபைல் பயன்பாடுகள் மற்றும் UPI ஹேண்டில்களை மட்டுமே பயன்படுத்தவும்.

- உங்கள் விண்ணப்ப படிவங்களை UPI உடன் ஒரு சிண்டிகேட் உறுப்பினர், அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்கு தரகர், அல்லது ஒரு பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் அல்லது ஒரு வைப்புத்தொகை பங்கேற்பாளருக்கு மட்டுமே செலுத்தும் இயக்கமுறையாக சமர்ப்பிக்கவும்.

- IPO விண்ணப்பத்திற்கான வரம்பு UPI-இல் செய்யப்படும் ஒரு பரிவர்த்தனைக்கு ரூபாய். 2 லட்சம் மற்றும் இது சில்லறை தனிநபர் முதலீட்டாளர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது.

- மூன்றாம் தரப்பு UPI ID அல்லது மூன்றாம் தரப்பு வங்கிக் கணக்கைப் பயன்படுத்தும் முதலீட்டாளர்கள் ஒதுக்கீட்டிற்கு கருதப்படமாட்டார்கள்

## பிற்சேர்க்கை – V

## அருஞ்சொல் விளக்கத் திரட்டு

| வரிசை எண் | சுருக்கம் | முழு வடிவம் |
|---|---|---|
| 1. | AMC | வருடாந்திர பராமரிப்பு கட்டணங்கள் |
| 2. | ASBA | வங்கி கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகையை நிறுத்திவைக்கும் ஒப்புதலை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் |
| 3. | BSDA | அடிப்படை சேவைகள் டிமேட் கணக்கு |
| 4. | CAS | தொகுக்கப்பட்ட கணக்கு அறிக்கை |
| 5. | CDSL | சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் |
| 6. | டிமேட் | டிமேட்டிரியலைஸ்டு |
| 7. | DP | வைப்புத்தொகை பங்கேற்பாளர் |
| 8. | IA | முதலீட்டு ஆலோசகர்கள் |
| 9. | IGRC | முதலீட்டாளர் குறையுற்றோர் குறை தீர்க்கும் குழு |
| 10. | IGRP | முதலீட்டாளர் குறையுற்றோர் குறை தீர்வுக் குழு |
| 11. | IPO | ஆரம்ப பொது வழங்கல் |
| 12. | KIN | KYC அடையாள எண் |
| 13. | KYC | உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் |
| 14. | MII | சந்தை உள்கட்டமைப்பு இடைத்தரகர்கள் |
| 15. | MSE | மெட்ரோபாலிட்டன் ஸ்டாக் எக்ஸ்ச்சேஞ் ஆ∴ப் இந்தியா லிமிடெட் |
| 16. | NSDL | நேஷனல் செக்யூரிட்டிஸ் டெப்பாசிட்டரி லிமிடெட் |
| 17. | NSE லிமிடெட் | நேஷனல் ஸ்டாக் எக்ஸ்ச்சேஞ் ஆ∴ப் இந்தியா லிமிடெட் |
| 18. | PAN | நிரந்தர கணக்கு எண் |
| 19. | PoA | அதிகாரப் பத்திரம் |
| 20. | SCORES | SEBI புகார்கள் குறைப்பு அமைப்பு |
| 21. | SEBI | செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்ச்சேஞ் போர்டு ஆ∴ப் இந்தியா |
| 22. | SMS | குறுஞ்செய்தி சேவை |
| 23. | UCC | தனித்துவமான வாடிக்கையாளர் குறியீடு |
| 24. | UID | தனித்துவமான அடையாளம் |

**FAQ மற்றும் இணையத் தகவல்கள் கீழ் காணும் இணையத்தளங்களில்:**

இணையத்தளம்: www.sebi.gov.in
முதலீட்டாளர் இணையத்தளம்: http://investor.sebi.gov.in

இணையத்தளம்: www.bseindia.com

இணையத்தளம்: www.nseindia.com

இணையத்தளம்: www.nsdl.co.in

இணையத்தளம்: www.cdslindia.com

இணையத்தளம்: www.msei.in

## செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்ச்சேஞ் போர்டு ஆஃப் இந்தியா

ப்ளாட் எண். C4-A, 'G' ப்ளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை - 400 051
தொலைப்பேசி: +91-22-26449000 / 40459000 | இணையத்தளம்: www.sebi.gov.in
முதலீட்டாளர் இணையத்தளம்: http://investor.sebi.gov.in
வழிக்காட்டும் குரல் அமைப்பு உரையாடல் (IVRS): தொலைப்பேசி: +91-22-26449950 / 40459950
முதலீட்டாளர்களுக்கான கட்டணமில்லா தொலைப்பேசி உதவி எண்: 1800 22 7575 மற்றும் 1800 266 7575
முதலீட்டாளர் புகார்களுக்கு: http://scores.gov.in

## BSE லிமிடெட்.

25வது தளம், P. J. டவர்ஸ், டலால் ஸ்ட்ரீட், ஃபோர்ட், மும்பை - 400 001
தொலைப்பேசி: 022 22721233/34
இணையத்தளம்: www.bseindia.com
மின்னஞ்சல் முகவரி: is@bseindia.com

## நேஷனல் ஸ்டாக் எக்ஸ்ச்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட்.,

எக்ஸ்ச்சேஞ் பிளாசா, C-1, ப்ளாக் G, பாந்த்ரா குர்லா வளாகம்,
பந்த்ரா (கிழக்கு), மும்பை - 400 051
தொலைப்பேசி எண்: (022) 26598100 - 8114
ஃபேக்ஸ் எண்: (022) 26598120

## நேஷனல் செக்யூரிட்டிஸ் டெப்பாசிட்டரி லிமிடெட்

ட்ரேட் வேர்ல்டு, 'A' விங், 4வது & 5வது தளங்கள், கமலா மில்ஸ் வளாகம்,
லோவர் பாரேல், மும்பை - 400 013
தொலைப்பேசி: (022) 2499 4200 | ஃபேக்ஸ்: (022) 2497 6351
முதலீட்டாளர்களுக்கான தொலைப்பேசி உதவி எண்: 1800 222 990
இணையத்தளம்: www.nsdl.co.in

## சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்

மாராத்தான் ஃப்யூச்சரெக்ஸ், A விங், 25வது தளம், மஃபத்லால் மில்ஸ் வளாகம்,
N. M. ஜோஷி மார்க்,
லோவர் பரேல் (கிழக்கு), மும்பை - 400 013
கட்டணமில்லா தொலைப்பேசி உதவி எண்: 1800-200-5533
இணையத்தளம்: www.cdslindia.com

## மெட்ரோபாலிட்டன் ஸ்டாக் எக்ஸ்ச்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட்

விப்ஜியார் டவர்ஸ், 4வது தளம், ப்ளாட் எண் C-62, ட்ரைடென்ட் ஹோட்டல் எதிரில்,
பாந்த்ரா குர்லா வளாகம்,
பாந்த்ரா (கிழக்கு), மும்பை - 400 098
அலுவலகம்: +91 22 6112 9000

**இலவச சுற்றறிக்கை வாசிப்புக்கு**